விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 13 ஜுல்கஜ் 11 இதழ் 228
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29—9—82

### யாழ். நகரிலுள்ள
## அச்சகத்துக்கு பொலிஸார் 'சீல்' வைத்தனர்
### உரிமையாளர்மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள ஒரு அச்சகத்துக்கு பொலிஸார் நேற்று 'சீல்' வைத்துள்ளனர்.

துண்டுப் பிரசுரம் ஒன்று அச்சடித்ததாக குற்றம்சாட்டி பொலிஸார் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள மேற்படி அச்சகத்தின் உரிமையாளரும், ஊழியரும் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டுவைத்ததாகக்கூறப்படும் மானிப்பாய் நவாலி தெற்கைச் சேர்ந்த திரு. மு. டேவிற்சன் என்பவரைப் பொலிசார் விசாரணைக்காகத் தேடிவருகின்றனர்

வடமாகாணத்தில் நாளை வியாழக்கிழமையும் நாளைமறுதினமும், திருகோணமலையில் அக்டோபர் 4-ம் திகதியும், கிழக்கு மாகாணப் பிரதேசங்களில் 8ம் திகதியும் பாடசாலைகள், தனியார் கல்லூரிகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் மாணவர்கள் எதிலும் கலந்து கொள்ளவேண்டாம் என்றும் சினிமாத தியேட்டர்களை இத்தினங்களில் மூடுமாறும் ஏழு இயக்கங்கள் ஒன்று சேர்ந்து பிரசுரம்மூலம் அறிக்கையும் விடுத்துள்ளன. இத் துண்டுப் பிரசுரம் அடங்கிய சில தஸ்தாவேஜுகளையும், அச்சகத்திலிருந்து பொலிசார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிகிறது. [மா]

# 'ரூபவாஹினி' தேர்தல் பிரசாரம்
# இன்று ஆரம்பம்!

## வானொலி பிரசாரம் நாளை ஆரம்பமாகிறது

(கொழும்பு)

**ஜனதிபதி தேர்தலையொட்டிய தொலைக்காட்சி (ரூபவாஹினி) தேர்தல் பிரசாரம் இன்று ஆரம்பமாகிறது.**

இன்றுமுதல் அக்டோபர் மாதம் பதினாறாம் திகதிவரை நடைபெறும் 'ரூபவாஹினி' தேர்தல் பிரசார நிகழ்ச்சிகளில் முதலில், மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரம் இடம்பெறுகிறது. வானொலி தேர்தல்பிரசாரம் நாளை ஆரம்பமாகி அக்டோபர் மாதம் பதினாறும் திகதி வரை நடைபெறும்.

### ரூபவாஹினி நிகழ்ச்சிகள்

செப். 29 புதன்: இரவு 8-30—8-45 திரு. றோகண விஜேவீர (ம. வி. மு.)

செப். 30 வியாழன்: இரவு 8-30—8-45 திரு. ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.)

அக்டோபர் 2: இரவு 7-15—7-30 திரு. வாசுதேவநாணயக்கார (ந. ச.ச. க

அக் 2 சனி: இரவு 7-15—7-30 டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா. (ச ச. க.)

அக். 5 செவ் : இரவு 7-45—8-00 வாசுதேவநாணயக்கார (ந ச. ச க)

அக் 7 வியாழன்; இரவு 7-15—7-30 டாக்டர் கொல்வின் ஆர், டி. சில்வா (ச. ச. க.)

அக். 7 வியாழன்: இரவு 8-30—8-45 திரு. ஹெக்டர் கொப்பேகடுவ சு. க.)

அக். 9சனி: இரவு 8-45—9-00 திரு. வாசுதேவநாணயக்கார ந ச ச.க.)

அக். 10 ஞாயிறு: இரவு 8-00—8-15 டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா ச. ச. க)

அக் 14 வியாழன்: இரவு 8-45—9-30 திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க,)

அக். 15 வெள்ளி: இரவு 8-30—8-45 திரு. றோகண விஜேவீர (ம. வி. மு.)

அக். 16 சனி: இரவு 6-45—7-00 திரு, ஜி ஜி. பொன்னம்பலம் (அ. இ த. க.)

அக். 16 சனி: இரவு 7-15—7-30டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா (ச. ச க.)

(8ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அட்டைகளை எரித்தார்கள்

[கொழும்பு]

கூட்டணிப்பிரமுகரும், சட்டத்தரணியுமான திரு எஸ். சந்திரகாசன் இல்லத்தில் ஜனதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள்நேற்று எரிக்கப்பட்டன.

திரு சந்திரகாசனும் மற்றும் இருபத்தொரு பேரும்தபாலில் வந்த இந்த அடையாள அட்டைகளை குவியலாக வைத்து தீயிட்டு எரித்தார்கள்.

ஜனதிபதித்தேர்தலைபகிஷ்கரிப்பதென்றமுடிவுக்கு அமைய இந்தஅடையாள அட்டைகளை எரித்ததாக திரு. சந்திரகாசன் தெரிவித்தார் (இ

## 'ஜே.ஆரே.வெற்றிபெறுவார்!'
### வேட்புமனு நிராகரிக்கப்பட்ட முதியான்சேயின் நம்பிக்கை

[கொழும்பு]

ஜனதிபதி தேர்தலில் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவேவெற்றிபெறுவார் என்று திரு முதியான்சே தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனதிபதி திரு. ஜெயவர்த்தனவை சந்தித்த திரு தென்னக்கோன் தேர்தலில் தாங்களே வெற்றிபெறுவீர்கள் என நம்பிக்கைதெரிவித்தார்.

ஜனதிபதித் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய இவரது வேட்பாளர் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்பட்டதும், பின்னர் இவர் அதனை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மறுதாக்கல் செய்து அது நிராகரிக்கப்பட்டதும் தெரிந்ததே (சு

அரிய சந்தர்ப்பம்

★ COMPUTER PROGRAMMING
(Basic–Cobol-Fortran- R P G II)

★ றேடியோ-டெலிவிசன்-டெக்-மின்சார உபகரணங்கள் திருத்துதல் ஆசிரியர்:-நிதி

கொட்டேல்மனேஜ்மன்ற், ரெலக்ஸ் Spoken English, சகல பயிற்சிகளும் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் நடைபெறும் வகுப்பு ஆரம்பம் 29-09-82

விபரங்களிற்கு:-

**The School of Computer Studies**

52/1, கனகரத்தினம் கட்டிடம் மேல்மாடி
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4675)

## "சிறிமாவுடன் இன்னும் சேரவில்லை"- முன்னாள் அமைச்சர் குமாரசூரியர்

[கொழும்பு]

''நாங்கள் சிறிமாவோ குழுவோடு இன்னும் சேரவில்லை. கொப்பேகடுவவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வதென்ற முடிவைமட்டும் இப்போது எடுத்துள்ளோம்'' என்று முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (மைத்திரி பிரிவு) உபதலைவர்களில் ஒருவருமான திரு. செ. குமாரசூரியர் நேற்றுத் தெரிவித்தார்

ஸ்ரீமா கோஷ்டியுடன் சேர்வதா இல்லையா என்றமுடிவை செயற்குழுகூடி முடிவுசெய்யுமென்றும் இம்மாதம் 25ம்திகதி கூடி தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் திரு. குமாரசூரியர் குறிப்பிட்டார். (இ(

## கருகிய நிலையில் சடலம்: இளைஞர் என அடையாளம்

[யாழ்ப்பாணம், மாவிட்டபுரம்]

வீமன்காமத்திலுள்ள பனங்கூடலில் எரிந்து கருகிய நிலையில் காணப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காட்டப்பட்டது. புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தங்கராசா இரத்தினசிங்கம் என்பவர் தனது இருபது வயதான சகோதரர் தங்கராசா இராஜசேகரம் என அடையாளம் காட்டினார்.

மல்லாகம் நீதிபதி திரு சி. வி. விக்கினேஸ்வரன் நேரில் பார்வையிட்டு சடலம் குறித்து தீவிர விசாரணைமேற்கொள்ளுமாறு முன்னதாக பொலிசாரைப் பணித்தார்.

மேற்படி சடலம் உடலில் பல காயங்களுடனும், எரிந்த நிலையிலும் நிர்வாணமாகக் கிடந்தது.

எவரும் இச்சடலத்தை அடையாளம் காணாமையால், இதனை யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது அங்கு வைத்து சகோதரர் அடையாளம் காண்பித்தார். பிரேதபரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இச்சடலத்தின் மர்மம் குறித்து காங்கேசன்துறைப் பொலிஸ் சப். இன்ஸ்பெக்டர் திரு. வி. இரத்தினசபாபதி தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணையில் இறங்கியுள்ளது. [மா]

## லக்ஷ்மன் யு. என். பி. யில் சேர்ந்தார்

[கொழும்பு]

முன்னாள் பலப்பிட்டி சுதந்திரக் கட்சி எம் பியான திரு. லக்ஷ்மன் டீ சில்வா நேற்று ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்துகொண்டார்

1960ம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக்கட்சி சார்பில் பலப்பிட்டி தொகுதியில் வெற்றி பெற்ற இவர் கடந்ததேர்தலிலும், பலப்பிட்டியில் போட்டியிட்டிருந்தார்.

தற்போதுள்ள நிலையில் சுதந்திரக்கட்சிக்குள் கட்டுப்பாடு இல்லையென்றும் தாய், மகன், மாமன், மருமகன் எல்லோரும் போட்டிபோட்டுக்கொண்டிருப்பதால், தான் சுதந்திரக்கட்சியை விட்டு வெளியேறியதாகவும், அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். [க]

# வட்டு எம். பி: குட்டிமணி நேற்று சம்மதம்தெரிவித்தார்

(கொழும்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நியமனம் பெறுவதற்கு வெலிகடை சிறைச்சாலையில் உள்ள குட்டிமணி சம்மதம் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்டசட்டத்தரணி எம். சிவ. சிதம்பரம் சட்டத்தரணி எஸ். நவரத்தினம்[கரிகாலன்] ஆகியோர் நேற்றுக்காலை சிறைச்சாலைக்குச் சென்று குட்டிமணியையும், ஜெகனையும் சந்தித்தனர்.

அப்பொழுது குட்டிமணி சம்மதம் தெரிவித்ததாகவும், ஜெகன் அதனை ஆதரித்ததாகவும் சட்டத்தரணி நவரத்தினம் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை நியமனத்தை மறுக்கவில்லை என்றும், தமிழர் விடுதலைக்கூட்டணியை தாக்கி எதுவும் கூறவில்லை என்றும், அவர்கள் தெரிவித்ததாகவும் சட்டத்தரணி நவரத்தினம் நேற்றுசெய்தியாளர்களிடம். தெரிவித்தார்

பனாகொடை இராணுவ முகாமிற்குச் சென்றபோது காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களான தங்கத்துரை அல்லது அ. தங்கவேலு தேவன் அல்லது சிவசுப்பிரமணியம், சிவபாதம் வை. நடேசபாதம் ஆகியோர் வட்டுக்கோட்டைக்கு குட்டிமணி நியமிக்க ஆதரவுதெரிவித்துள்ளதாகவும் சட்டத்தரணி

8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 7½ பரப்புக் குடியிருப்பதற்குரியகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: A. சிவகுரு, தேவாலய வீதி, சாவகச்சேரி. 4654

சாவகச்சேரி, சரசாலை அரசடி வயல், நளவகாடு நெற்பரப்பு, 5½ஏக்கர் வயல் விற்பனைக்குண்டு சரசாலை வடக்கு, சரவணமுத்து பேரம்பலத்துடன் தொடர்பு கொள்ளவும். 4688

சொந்தப்பாவிப் பிலுள்ள புதிய SONY 12'' Black and White T V விற்பனைக்குண்டு. 73, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4690

மூளாய் தேவாலய வீதியில் 4½ பரப்புக் காணியும், வீடும் [ஆறு அறைகள்] கிணறும், மின்சார வசதியும், பைப் வசதியும்கொண்ட காணி விற்பனைக்குண்டு விரும்புபவர் கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். நா. ஏகாம்பரம், சட்டத்தரணி, வட்டுக்கோட்டை. 4683

மருத்துவ ஆய்வுகூடத்துக்கு தேவையான சகல பொருள்களுமுண்டு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: Dr வி. சச்சிதானந்தராஜா, கண்ணுகிளினிக், காரைநகர் ரோட், சித்தங்கேணி. 4680

'யமஹா' X T 250 சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. மணிக்கு எண்பது மைல் ஓடக்கூடிய 21 குதிரைச் சக்தி கொண்டது. கலனுக்கு 105 மைல்கள் இயங்கும் புதிய விலை 28,950 ரூபா. முழு அளவில் காப்புறுதி செய்யப்பட்டது 5000 ரூபா பினுன்ஸ் உண்டு. யாழ்ப்பாணம் றீகல் படமாளிகையில் பார்வையிடலாம். 4689

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்

### கேள்வி விண்ணப்பம்

லொறி பொடி அடித்தல்
ரிங்கர் வேலை
எஞ்சின் திருத்த வேலை

எமது சங்கத்தில் உள்ள பி எம் பி. (மொறிஸ்) மொடல் லொறி ஒன்றுக்கு மேற்படி வேலைகளைச் செய்வதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சங்க அலுவலகத்துக்கு நேரில் சமுகம் கொடுத்து லொறியினைப் பார்வையிட்டு தங்கள் விண்ணப்பங்களை ''தலைவர், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன்'' என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''லொறி திருத்த வேலைகள்'' என எழுதி 11-10-82-ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

25-09-82. (4678)

## தேவை

தையல் வேலைக்கு நன்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அனுபவம் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். சம்ரா சாமென்ஸ், 39/9, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 4671

பாவித்த தையல் மெஷின், பெண்கள் சைக்கிள் உடன் தேவை விபரங்களுடன் நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும் அதிபர், நளாயினி ஸ்ரோஸ், பூநாறிமரத்தடிசந்தி, கொக்குவில். 4691

### வீரசிங்கம் மண்டபக் கட்டிடத் திருத்தம்

மேற்படி கட்டிடத் திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பம் பெறும் முடிவு திகதி; 11-10-1982. விண்ணப்பமுடிவு திகதி: 15-10-1982 விபரங்களுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மாவட்டச் செயலாளர்,
தேசிய கூட்டுறவுச் சபை,
12, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
4686

### ஐந்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி
இராசையா
செல்லலட்சுமி

தோற்றம்: 10-4-1931
மறைவு: 23-9-1977

அன்பின் இலக்கணமாய்
அறிவின் ஒளிவிளக்காய்
பாசத்தின் குரலாக
எங்கள் மத்தியில்
சுடர்விட்ட இதயமே
எம்மை எல்லாம்
விட்டுச்சென்று ஐந்தாவது
ஆண்டு கடந்துவிட்டதே!
உங்கள் ஆத்மா
சாந்தியடைய
மேற்குஜெர்மனி
இராஜேந்திரன்,
கபிலன்,
பரிஷ் கணேஸ்க்கரன்,
உரும்பராய்
கௌரி, யமுனு,
திருநெல்வேலி
சந்திரசேகரம்
ஆகியோர் இறைவனைப்
பிரார்த்திக்கின்ருேம்
4682

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்)
அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர் சங்க 16வது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 30ம் திகதி வியாழக்கிழமை காலை திரு வீ. கோபாலசண்முகம் பிள்ளை தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
காலஞ்சென்ற யாழ்ப்பாணம், கந்தர் மடம் பலாலி வீதி, 57-ம் இலக்கத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை உமாபதி கைம்பெண் நாகேஸ்வரி என்பவரின் மரணசாதன மில்லாச் சொத்துக்களின் விடயத்தில்.
மரணமெய்தியவர்
மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 3623.

உமாபதி கந்தசாமி,
இல.57, பலாலி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம ஆண்டு ஐப்பசி மாதம் 1-ம் திகதியன்று முற்பகல் 9 30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982-ம் ஆண்டு புரட்டாதி 6-ந் திகதி நீதிமன்றக்கட்டளைப்படி.

தா. குலஞானம்
பதிவாளர்.

வன்ரவு
இராமலிங்கம்
பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி,
52, வைமன்வீதி,
யாழ்ப்பாணம்.
4660

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# தண்ணீரின்றிக்கஷ்டம்

[புலோலி]
பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள், சிறைச்சாலை ஊழியர்கள் ஆகியோர் நீரின்றிப் பலத்த கஷ்டமனுபவித்துவருகின்றனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற வளவுக்குள்ளிருக்கும் தண்ணீர்த் தாங்கியிலிருந்து மாவட்டநீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், சிறைச்சாலைப் பகுதி, மாவட்ட நீதிபதிவாசஸ்தலம், நீதிமன்றநீதிபதிவாசஸ்தலம் ஆகியனவற்றிற்கு நீர் விநியோகம் செய்யப்பட்டுவந்தது.

ஆனல் இங்கு இயங்கி வந்த நீரிறைக்கும் மோட்டார் பழுதடைந்தமையால் கடந்த சுமார் இருவாரங்களுக்கு முன்னர் கட்டிடத் திணைக்களத்தினர் இந்நீரிறைக்கும் மோட்டரைக் கழற்றிச் சென்றனர். இன்றுவரை அது திருப்பிப் பொருத்தப்படவில்லை. இதனல் மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், சிறைச்சாலை மறியல்பகுதி, மாவட்ட நீதிபதிவாசஸ்தலம், நீதிமன்ற நீதிபதி வாசஸ்தலம் என்பவற்றிற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த நீர்விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது,

இந்நீர் விநியோகத்தைச் சீர் செய்யுமாறு நீதியமைச்சைக் கோரியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையாம்.

மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் புதிய வாசஸ்தலத்திற்கு நீர்விநியோகம் செய்வதற்கென மாவட்ட நீதிமன்றஊழியர்கள் இங்கு சிரமதானத்தில் கிணறு ஒன்றைத் தோண்டி உதவியுள்ளனர். ஆனல் அக்கிணறு மேல்கட்டுக் கட்டப்படவில்லை இதற்கு அமைச்சு நிதிவசதி செய்தால் கிணறு மேற்கட்டு கட்டப்பட்டு நீதிமன்றஊழியர்களின் சிரமதான நடவடிக்கையின் பெரும்பயனையும் அடைய முடியும். இல்லையேல் மழைகாலம் அண்மித்துள்ளமையால் மழையின் போது இக்கிணறு மண்ணினல் மூடப்பட்டுவிடும்,

எனவே பழுதடைந்த நீரிறைக்கும் மோட்டரைஉடனடியாகத் திருத்திப் பொருத்துவதற்கும், நீதிபதியின் வாசஸ்தலத்தில் சிரமதான முறையில் தோண்டப்பட்ட கிணற்று வேலைகளையும் பூர்த்திசெய்து நீதிமன்றஊழியர்கள், சட்டத்தரணிகள், சிறைச்சாலை ஊழியர்கள், நீதிபதிகளின் வாசஸ்தலங்கள் ஆகியனவற்றின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்கள் கருத்துத்தெரிவித்தனர். [அ

## சங்கச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)
வட மாநிலக் கல்வித் திணைக்கள பொழுதுபோக்குக் களரியின் வருடாந்த பொதுக் கூட்டம் கல்விப்பணிப்பாளரும் களரியின் போஷகருமான திரு. ம. சிமியாம்பிள்ளை தலைமையில் நல்லூர் ஸ்தாபன சி. சி. த. க. பாடசாலையில் நடைபெற்றது. ஆரம்ப உரையில் கல்விப்பணிப்பாளர் அவர்கள் களரியின் சேவைத்திறனைப் பாராட்டியதுடன் களரி தொடர்ந்தும் நல்ல சேவையாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அதைத்தொடர்ந்து புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: நிர்வாக அதிகாரி திரு. கே சந்திரராஜா, உப-தலைவர்கள்; நிதிஉதவியாளர் திரு ஆர் சோதிப்பிரமானந்தர், பிரதம கல்வியதிகாரி திரு. வெ சபாநாயகம, செயலாளர்: திரு. ஆர். தவராஜா, உப-செயலாளர்: திரு கே யோகேஸ்வரன், பொருளாளர்: திரு. எவ். ஜேக்கப், உப-பொருளாளர்: திரு. எம். ஞானசீலன், கலாசாரச் செயலாளர்: திரு. ஏ. எஸ். கருணுநிதி. பொதுச்நலச் செயலாளர் வீரத்கதிப்பிள்ளை, நூலகப் பொறுப்பாளர்: திரு. எஸ். சர்வானந்தா, விளையாட்டுச் செயலாளர்: திரு சி. திருஞானம். செயற்குழு உறுப்பினர்கள்; திருவாளர்கள் பி. தாமோதரன், பி. சடாச்சரம், எஸ். ஏ.ஏ. கபூர், எஸ். பூபாலசிங்கம், திருமதி எஸ். சிவஞானம், கணக்காளர்: திரு. எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம் [அ]

0 0

### மீனுட்சியம்பாள் ச. ச. நிலையம்

(வேலணை)
சரவணை- வேலணை மேற்கு ஸ்ரீமீனுட்சிஅம்பாள் சனசமூக நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் உத்தியோகத்தர் விபரம் வருமாறு:-

போஷகர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை தலைவர்:- நா.மணிவாசகம்பிள்ளை, செயலாளர்; திரு.ப. அருளாரூரன், பொருளாளர்: திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம். செயற்குழு உறுப்பினர்கள் 11பேர். [அ]

0 0

### முத்தமிழ் மன்றம்

சங்கானை]
சங்கானை முத்தமிழ் மன்றத்தின் மூன்ருவது ஆண்டு விழா சென்ற ஞாயிறு 12-9-82 சங்கானை நிகரை ரவர் ஆலய முன்றலில் திரு தி. சிவதஷிணுமூர்த்தி தலைமையில்நடைபெற்றது நடப்பு வருட உத்தியோகத்தர்களாக கீழ்க்காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்கள்; குழந்தைக்கவிஞர் சண்முகம் - கந்தசாமி, இ. நடேசன் ஜே பி. தலைவர்: திரு தி. சிவதட்சணுமூர்த்தி, உப தலைவர்: திரு. பொன் சிவகுரு, செயலாளர்: திரு நா த இராசதுரை, உப செயலாளர்: திரு எஸ் பரமசிவம், பொருளாளர்: திரு. பொ. சாம்பசிவம், உப பொருளாளர்: திரு எஸ். இராசையா, பத்திராதிபர்: திரு. சே. சி. குலநாயகம், கணக்குப் பரிசோதகர்: திரு. செ. நல்லை ஆனந்தன்.

0 0

### ஆலய பரிபாலனசபை

[ஒட்டுசுட்டான்]
முத்துஐயன் கட்டு முத்து விநாயகர் ஆலயபரிபாலனம் ஆரம்பகாலம் தொட்டு நீர்ப்பாசனப் பகுதியினரும் பொது மக்களும் பரிபாலித்து வந்தனர். பின்னர் பொதுமக்களின் வேண்டுகோளின்படி கடந்த

[7-ம் பக்கம்பார்க்க]

ஒட்டோஸ் லிமிட்டெட்
ரயர் விற்பனை
சகல வாகனங்களுக்கும் (ஸ்கூட்டர் உட்பட) தேவையான ரயர், ரியூப்புகள் கைவசம் விற்பனைக்கு உண்டு. உங்கள தேவைக்கு தொடர்பு கொள்ளவும்.
ஒட்டோஸ் லிமிட்டெட்,
190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4636) தொலைபேசி: 22496

சவூதி அரேபியாவில்
வேலை வாய்ப்பு
(LABOURER GRADE)
செப்டம்பர் 21ம், 22ந் திகதிகளில் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற முதல் தேர்வில் எமது என்ஜினியரால் தெரிவு செய்யப்பட்டோர் ''கொரியா'' என்ஜினியரின் இறுதித்தேர்வுக்கு சகல தஸ்தாவேஜுகளுடனும் 2-10-1982ந் திகதி கீழ்க் காணும் விலாசத்திற்கு நேரில் வரவும்.
Construction & Development Co. Ltd,
37, S. de. S. Jayasinghe Mawatha,
Nugegoda.
Labour Licence No: 96 [4685]

# பெரியகுளம் லோகசபாத்தேர்தல்:

# அ.தி.மு.க. ஜக்கய்யன் வெற்றி!

# திமுகவுக்கு 1,83,117 வாக்குகள்!

## இந்திரா காங்கிரஸ் கட்டுப்பணமிழந்தது!

சென்னை, செப். 28

பெரியகுளம் லோகசபா இடைத்தேர்தலில் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். ரி கே. ஜக்கய்யன் 69,260 வாக்குகள் அதிகப்படியாக பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் உட்பட 23 அபேட்சகர்கள் கட்டுப்பணம் இழந்தனர்.

அ. தி. மு. க. வைச்சேர்ந்த திரு. எஸ். ரி. கே. ஜக்கய்யனுக்கு 2,52,377 வாக்குகள் கிடைத்தன. திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர் திரு. என். ராமகிருஷ்ணனுக்கு 1,83,117 வாக்குகள் கிடைத்தன.

இத் தேர்தல்மூலம் தி.மு.க. தொகுதியான பெரியகுளம் தொகுதியை, அ. தி. மு. க. கைப்பற்றிக் கொண்டது.

இந்திராகாங்கிரஸ் கட்சிக்கு 29,969 வாக்குகள் கிடைத்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சிக்கு 16,366 வாக்குகளும் ஜனதாவுக்கு 3,901 வாக்குகளும் கிடைத்துள்ளன. 23 அபேட்சகர்கள் கட்டுபணம் இழந்துள்ளனர்.

நேற்று நள்ளிரவு 12மணி 20 நிமிடத்தின்போது தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையாளர் திரு. எம். சத்தியமூர்த்தி அறிவித்தார். தேர்தல் சிறப்புபார்வையாளர் திரு.வி. கே..ராவ்வும் அச்சமயம் இருந்தார்.

வெற்றிபெற்ற அ. தி. மு. க. வேட்பாளர் திரு. ஜக்கய்யன் மண்டபத்திற்கு வெளியில் வந்தபோது, பெருந்திரளான அ. தி. மு. க. ஆதரவாளர்கள் பலத்த கரகோஷம் செய்து வரவேற்றனர்.

பெரியகுளம் தொகுதி மக்களுக்கு, தமிழக அரசு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் நன்றி தெரிவித்துள்ளார் வெற்றி விழாக்களுக்கான ஏற்பாடுகளை தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசனை செய்தபின் ஏற்பாடு செய்யுமாறு அவர் தெரிவித்துள்ளார் ஆளும் கட்சியில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இத் தேர்தல் முடிவு எடுத்துக் காட்டுவதாகவும் அவர் மேலும் கூறினர்.

தமிழக அரசு அமுல்நடத்தி வரும் திட்டங்களுக்கு இத் தேர்தல்மூலம் மக்கள் ஆதரவு வழங்கியுள்ளதாக, அ. தி. மு க. பொதுச் செயலாளர் திரு. சண்முகம் அறிவித்துள்ளார்

தி.மு.க. வைச் சேர்ந்த கம்பன் நடராஜன் காலமானதைத் தொடர்ந்து இந்த இடைத்தேர்தல் நடைபெறறது. [க]

ரயில் கொள்ளை:

## நால்வர் மட்டுமே முறைப்பாடு செய்தனராம்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பு — யாழ்ப்பாணம் மெயில் ரயில் கொள்ளைச் சம்பவத்தின்போது பொருட்களைப் பறிகொடுத்தவர்களில் இதுவரை நால்வரைத்தவிர மிகுதியானவர்கள் தங்கள் முறைப்பாடுகளைப் பொலிசாருக்குத் தெரிவிக்கவில்லையாம்.

கொள்ளையர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்களையும் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காட்டவில்லை என்றும் வவனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையர்களிடம் பொருட்களைப் பறிகொடுத்தவர்கள் அத்தனைபேரும் தங்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்காதபடியால் பிடிபட்ட கொள்ளையர்களைவிட மீதிப் பேரை கைதுசெய்ய முடியாமலிருப்பதுடன், மேலும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களையும் கைப்பற்ற முடியாமலிருப்பதாக. வவனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சிவப்பிரகாசன் தெரிவித்துள்ளார்.

இதுவரை மூன்று கொள்ளையர்கள் பிடிபட்டதுடன், அவர்களிடமிருந்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதும், பொருள்களை பறிகொடுத்தவர்களில் நால்வர் தங்கள் முறைப்பாடுகளைப் பதிந்ததுடன், பொருட்களை அஅடையாளம் காட்டியதும் தெரிந்ததே. (மா)

பாகிஸ்தானில்

## வழிப்பறி, கொள்ளை, நாசவேலை திருட்டுக்கு மரணதண்டனை!

கராச்சி, செப். 28

அரசுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தானில் அரசியல் படுகொலைகள், நாசவேலைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துபவருக்கும் மரணதண்டனை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரசு அலுவலகங்கள். மின் நிலையங்கள், ரயில், விமான நிலையங்களில் நாசவேலையில் ஈடுபடுபவருக்கும், தொழிற்சாலையை சேதப்படுத்துவோருக்கும் இத்தகைய நாசவேலைகளை செய்யத் திட்டமிடுவோருக்கும், அவர்களுக்கு உணவு உறைவிடம் வழங்குவோருக்கும் நாசவேலை பற்றி தெரிந்து அதனை அரசுக்கு அறிவிக்காமல் இருப்போருக்கும் மரணதண்டனை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வழிப்பறிக்கொள்ளைகள், திருட்டு ஆகியவற்றிற்கும் மரணதண்டனை விதிக்கப்படும். (க)

## முதலாவது டெஸ்ட்: பாக். வெற்றி

இஸ்லாமாபாத், செப். 28

பாகிஸ்தானுக்கும் அஸ்திரேலியாவுக்குமிடையே கராச்சியில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் அஸ்திரேலியா முதலாவது இன்னிங்ஸில் 284 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 179 ஓட்டங்களையும் எடுத்தது.

பாகிஸ்தான் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கட்டுகளை இழந்து 419 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது இரண்டாவது இன்னிங்ஸில் 1 விக்கட் நஷ்டத்திற்கு 45 ஓட்டங்களைப் பெற்றது. வெ)

பாலஸ்தீனிய முகாம்களில்

## பிரெஞ்சு, இத்தாலி சர்வதேச அமைதிகாக்கும் படைகள்!

### கரையில் 1500 அமெரிக்க துருப்புக்கள்

பெய்ரூட், செப் 28

சர்வதேச அமைதி காக்கும் பிரிவைச் சேர்ந்த பிரஞ்சு, இத்தாலி துருப்புக்கள், மேற்கு பெய்ரூட்டில் நிலைகொண்டுள்ளதைத் தொடர்ந்து அங்குள்ள இஸ்ரேல் படைகள் வெளியேறின.

விமானநிலையம், மற்றும் சில பகுதிகளில் மட்டும் இஸ்ரேல் படைகள் தங்கியுள்ளன, பாலஸ்தீனிய முகாம்களில், பிரஞ்சு இத்தாலிய துருப்புக்கள் தங்கியுள்ளன.

இஸ்ரேல் படைகள் வெளியேறிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் 1500 அமெரிக்க துருப்புகள் கரைக்கு அப்பால் நிலைகொண்டுள்ளன பெய்ரூட்டிலிருந்து இஸ்ரேல் படைகள் முற்றாக வெளியேறினபின் தான் அமெரிக்கப் படைகள் கரை இறங்குமென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பாலஸ்தீன முகாம்களில் நடந்த படுகொலை தொடர்பாக பூரண விசாரணை நடத்த வேண்டுமென்றகோரிக்கையை இஸ்ரேலிய மந்திரி சபையில் உள்ள சகல மந்திரிகளும் ஆதரிப்பதாக கூறப்படுகிறது. பெகின் அரசும் இதற்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இஸ்ரேலியர்கள் பெய்ரூட்டிலிருந்து முற்றாக வெளியேற வேண்டுமென சவுதி அரேபிய மன்னர், நேற்று ஜட்டாவில் யாத்திரிகர்கள் மத்தியில் கூறினர்.

பலஸ்தீனியர்களை பூண்டோடு அழிப்பதுதான் இஸ்ரேலியரின் நோக்கமாக இருப்பதாகவும் அவர் கூறினர்.

பலஸ்தீனியர், லெபனன் மக்கள்மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு அவர் பலத்த கண்டனம் தெரிவித்தார்.

ஈராக், ஈரான் யுத்தம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினர்.

### நெல் கடத்தல் முறியடிப்பு

சென்னை, செப். 28

வேலூர் தண்டயன் கோட்டையில் அனுமதிப்பத்திரமின்றி 2 லொறிகளில் 247 மூடைநெல் கடத்திச் செல்லும்போது பொலிஸார் அதனை முறியடித்து நெல்லைக்கைப்பற்றினர்.

லொறிச்சாரதி ஒருவர் தப்பிச் சென்றுவிட்டார். கைது செய்யப்பட்ட மற்றச்சாரதி 2 வார றிமாண்டில் வைக்கப்பட்டார். (க)

இடதுசாரி

### தீவிரவாதிகளை வெளியேற்ற முடிவு

லண்டன், செப். 28

பிரிட்டிஷ் தொழிற்கட்சியிலிருந்து இடதுசாரி தீவிரவாதிகளை வெளியேற்றத்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக, அடுத்த தேர்தலுக்குமுன் இத்தீர்மானம் அமுலுக்கு கொண்டுவரப்படும்.

### நுகர்வோர் நிலையம்

சென்னை, செப். 28

ஒரு கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட தமிழ்நாடு நுகர்வோர் பிராந்திய நிலையத்தை தமிழகஅமைச்சர்இரா. நெடுஞ்செழியன் நேற்று திறந்துவைத்தார்.

## மணிவாக்கு

வருமானத்தைவிட குறைவாகச் செலவுசெய்ய கற்றுக்கொண்டால் போதும்; நாம் ரசவாத வித்தையை அறிந்து கொண்டவர்களாவோம். — பிராங்க்லின்

# நமது நோக்கு

## "கல்லாத பேர்களே நல்லவர்கள்!'

மனிதன் மீது சொரியும் பொருள் சேராத புகழானது பொய்மை பேசுதலிலும் பொல்லாதது

பொல்லாதவர்களே இவ்விதசெயலில்ஈடுபடுபவர்கள் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது

அத்துடன் அதிகம் படித்தவர்கள் பேச்சு மிகப் பேசுபவர்களாகக் காணப்படுகின்றனர்; அவர்களுக்கு சிந்தித்துப்பார்க்கும் திறன் தானுகக் குறைந்து விடுகிறது; இருந்தும் இவர்களின் அரைப் படிப்புக கூட்டம் அதிகரித்தால் நாட்டுக்கு அவலம்.

வாதிப்பவர்கள் தம்வாக்கு வன்மையினுல், இல்லதை உள்ளதென்றும், உள்ளதை இல்லதென்றும் வாதித்தல் கூடும். அவரவர்களும் தத்தம் கொள்கைகளுக்கு ஏற்பக் காரணங்களும் சான்றுகளும் காட்ட முற்படுவர்.

ஜனநாயக ஆட்சியில் விவாதம், கருத்தரங்கு, பகிரங்கக் கூட்டம், துண்டுப் பிரசுரம், தேர்தல் விஞ்ஞாபனம் போன்ற சாதனங்கள் முக்கியமானவை. அந்த முறைகளில் மலிவானவை நாம் மேலே குறிப்பிட்ட வீண் விவாதங்கள்.

வீண் விவாதங்கள் எவை எவையென்று நாம் கண்டுபிடிப்பது எவ்வாறு? சாதாரண மதிநுட்பங் கொண்டு (Commonsense) அதுதானே இன்று மிக அசாதாரணமாக வந்துவிட்டது என்று ஒருவர் கேலி பண்ணுவதற்கும் இடமுண்டு.

இன்றைய தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும், வானெலியிலும் தொலைக்காட்சியிலும், எத்தனைவீண் விவாதங்கள் நடைபெறுகின்றன; நடைபெறவிருக்கின்றன?

நடக்கட்டுமே! மலிந்தால் சந்தைக்கு வருவதுஇயல்பு. சந்தையில்கூடும் மக்களுக்கு நல்லபொருள் எது, போலி எதுவென்று 'சுண்டி' எடுக்கும்ஆற்றல் நிறையஉண்டு.

புத்தகம் படித்த 'இசும்' பேசும் ஏட்டுச் சுரைக்காய்களுக்கு இதுமுடியாதவேலை; புளுகுப் பெட்டிகளும் இலகுவில் திறக்கப்பட்டு விடுவன. இதனை முற்றுமுணர்ந்த ஞானி ஒருவர் பாடியபாட்டின் அடியே எமதுதலையங்கம் ''கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் கற்றும் அறிவில்லாத என்கன் மனதை என் சொல்கேன்!' என்று தம்மைத் தாமே நொந்து கொள்கின்றார் தாயுமானவர்,

இன்றைய பிரசாரக் கூட்டங்களில் கற்றவர் என்று சொல்லப்படும் பெரியோர் எவரும் தம்முடைய அறிவில்லாத கர்மத்தைநொந்து கொள்ளும் ஞானமுடையவரல்லர்; தமக்கேவெற்றி, தம்முடைய கட்சிக்கேவெற்றி யென்றுபேரம் பேசுவதோடு மாற்றான் கட்சியை கேலி பண்ணுவதில் காலம் கழிக்கின்றனர். இந்த நிலையில் திருத்தம் ஏற்படுவது வாக்காளரைப் பொறுத்திருக்கிறது.

இவற்றை பொது மக்கள் அப்படியே நம்பிவிடுவாராகளென்றால் ஜனநாயக அடிப்படைத்தத்துவம் வேரோடு தகர்க்கப்பட்டுவிடும். அது இலகுவில் நடவாது. பொது மக்கள் — 'கல்லாதவர்கள்' 'நல்லவர்கள்', மெய்யையும் பொய்யையும் பிரித்து இனங்காணும் ஆற்றல் உடையவர்கள்.

தவறுகப் புரிந்தாலும் சுயசிந்தனையால் தம்மைத் தாம் திருத்திக் கொள்ளும் ஆற்றலுமுடையவர்கள்; வாக்குரிமையின் அடிப்படைத் தத்துவம் இது.

வேட்பாளர்களில் படிப்பும் ஆற்றலும் சிந்தனைத் திறனும் உடையவர்களில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா முதன்மை பெற்றவர் என்று எங்கும் ஒத்துக் கொள்ளப்படுகின்றது.

கருத்துப் பரிமாறலிலும் பகிரங்கக் கூட்டங்களிலும் எதிர்க்கட்சிக்குரிய மிக முக்கிய கருத்தை மிக ஆணித்தரமாக விளக்கி வருகின்றார் டாக்டர் கொல்வின்; எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஆதரிக்கவேண்டிய கருத்து.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனதிபதி ஒருவர் பாராளுமன்ற ஆட்சிக்கு சந்தகம் விளைக்கவும் சர்வாதிகாரியாக மாறவும் இன்றைய அரசியலமைப்பு இடமளிக்கிறது.

இதனை எல்லா எதிர்க்கட்சி வேட்பாளர்களும் ஆதரிக்கின்றனர். ஆனுல் அதன் முக்கியத்துவத்தை உணராதவகையில் பிரசாரத்தை நடத்துகின்றனர். இது நன்மையளிக்காது.

இந்த அரசியலமைப்பை மாற்றி அமைக்க உறுதி கூறும் வேட்பாளர் ஒருவர் வெற்றிபெற்றுல், பாராளுமன்ற ஆட்சியினரும் செயற்பட்டால், அதிலும் சர்வாதிகாரம் தலைதூக்காதா? என்றெரு கேள்வி எழ நியாயமுண்டு.

இதனை எழுப்பி விடையளித்து வருகிறவர்இன்றைய ஜனதிபதி ஜெயவர்த்தன அவர்கள். கடந்த ஆட்சியை உதாரணமாகக் காட்டுகிறர்

இவ்விருவரும் வாக்காளர்களின் பொறுப்பை பெரிதும் மதிக்கின்றனர்; மதிக்க வேண்டிய கட்டாயம்இன்று உண்டு; வெற்றி பெற்றுல் மக்களின் வாக்குரிமைக்கு அபாயம் எங்குண்டுஎன்பது பொது மக்களின் தீர்ப்பு.

நாம் இவ்விதம் கூறுவதினுல் போட்டி இவ்விருவருக்குமிடையிலே தானென்று கருதவில்லை; இன்றைய ஜனதிபதியின் கோரிக்கை;''கடந்தநான்கு வருடங்களாக எங்கள் ஆட்சி நாட்டுக்குச் செய்த அளப்பரியசேவை, அதற்குஉடன்பாடான கொள்கைகள், மக்கள் இறைமையை நாம் பாதுகாத்த திறமை–இவற்றைக் கணித்து தொடர்ந்து சேவை செய்ய இன்னெரு ஆறு ஆண்டுகால அவகாசத்தைத் தாருங்கள்''

இதனை எதிர்க்கும் மற்றைய வேட்பாளர்கள், ஒற்றுமைப்பட்டு ஒருவரை நிறுத்த முடியாத பக்குவத்திலும், தம்முள் ஒற்றுமைப்பட்ட கருத்து ''இந்தஅரசியலமைப்பை மாற்றி தனிக்கட்சி ஆட்சி அல்லது சர்வாதிகார ஆட்சிக்கு இடமளிக்காது பழைய பாராளுமன்ற ஆட்சியைக் கொண்டுவர வேண்டுமென்பதே'' எது நியாயமானது? அதுவெற்றியடைய விழிப்புணர்வு அவசியம்.

வாக்காளர்கள் – கல்லாத நல்லவர்கள், காணும் கேட்கும் போலிப் புளுகுகளுக்கு செவிகொடாது, உண்மையை உணர்ந்து நாட்டைப் பாதுகாப்பதில் வெற்றி காண முடியும்.

# ஜனதிபதி தேர்தலில் கிழக்கு மாகாணத்தின் நிலை

இலங்கையின் வரலாற்றில் முதல்தடவையாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி ஒருவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 20ந் தேதி நடைபெறப் போகும் இவ்வேளையில் இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் எதையாவது கூறி மக்களை ஆதரவை பெறும் நோக்குடன் ''அந்தரவானத்து றெக்கெட்டு''களாக பறக்கும் இவ்வேளையில் தேசிய மட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் முக்கியமான ஒரு பிரதேசமாக கணிக்கப்படும் கிழக்கிழங்கை மக்களின் நிலைபற்றி நோக்குவது பொருத்தமானதே. கலை, கலாசார பொருளாதார துறையில் ஏனைய மாவட்டங்களுடன் இணைந்தும், பிரிந்தும் தன் ஆதிக்கத்தை செலுத்தும் கிழக்கிழங்கை மக்களின் அரசியல் ஆதிக்கமும் அவ்வாறனதே.

திகமதுல்ல என்ற தேர்தல் மாவட்ட பெயர் கொண்ட அம்பாறைமாவட்டத்தையும், வடக்கே வெருகல் தொடக்கம் கிழக்கே நீலவானை வரையிலான மட்டக்களப்பு மாவட்டத்தையும், வெருகல் தொடக்கம் சீனங்குடா வரையிலான பிரதேசத்தை உள்ளடக்கிய திருமலை மாவட்டத்தையும் கொண்டு அமையப்பெற்றதே கிழக்கிலங்கையாகும்.

திருமலை, சேருவலை, மூதூர், கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை, அம்பாறை ஆகிய பத்து தொகுதிகளைக் கொண்ட இப்பிரதேசத்தில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5, 10, 394 ஆகும். முறையே தமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களை கொண்ட இம்மாகாணத்தில் கடந்த பொதுத்தேர்தலில் எட்டு இடங்களைக் ஐ. தே. கட்சியும், நான்கு இடங்களை கூட்டணியும் பெற்றதுகுறிப்பிடத் தக்கதாகும். அதன் பின்னர் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலில் இரண்டு மாவட்டத்தில் கூட்டணி தலைமைத்துவத்தையும், ஒரு மாவட்டத்தில் ஐ. தே, கட்சி தலைமைத்துவத்தையும் பெற்றுக் கொண்ட அரசியல் நிலைகளை நம்மனதில் நிறுத்திக் கொண்டு இன்றைய ஜனதிபதி தேர்தலில் இம்மாகாண மக்களின் நிலைகளையும், அரசியல் கட்சிகளின் நிலைகளையும் நோக்குவதே சிறந்தது என நம்புகிறேன்,

கூட்டணியின் தேர்தல் பகிஷ்கரிப்பு பற்றியபத்திரிகை அறிக்கை, அதனை அடுத்த அமைதியான மௌனம், தமிழ் ஈழ விடுதலைக்கழகத்தினர் ஸ்ரீலங்கா அரசுகளின்சகல தேர்தல்களையும் பகிஷ்கரிப்போம் என்றகோஷம், தமிழ்மகன் ஒருவனையே ஆதரிக்க வேண்டுமென்ற குமார் பொன்னம்பலத்தின் ஆதரவாளர் கோஷ்டியின் கோரிக்கைகள் வடஇலங்கையில் ஏற்படுத்துகின்றதாக்க விளைவுகளின் அளவுக்குமற்றுமோர் தமிழ்மாநிலமானகிழக்கிழங்கையில் இத்த கோஷங்கள் ஆதிக்கத்தை செலுத்துமா என்பதை இம்மாகாணத்தின் அரசியல் பின்னணிகள் மூலம் புரிந்து கொள்ளலாம்.

### மட்டக்களப்பு மாவட்டம்

இலங்கையின் இரண்டாவது பெரிய மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டம் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய மூன்று தொகுதிகளைக் கொண்டதாகும். கல்குடாத் தொகுதியில் 46,195 வாக்காளர்களையும், மட்டக்களப்புத் தொகுதியில் 80,3!4 வாக்காளர்களையும். பட்டிருப்புத் தொகுதியில் 45,891 வாக்காளர்களையும் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 1,72,480 ஆகும். இதில் இலங்கைத் தமிழர், 71% சோனகர் 24% சிங்களவர் 3% இந்தியத்தமிழர் 1% பறங்கியர் ஏனையோர் 1வீதம் ஆகும்.

திரு இராஜன் செல்வநாயகம் கூட்டணிக்கு ஆதரவு அளித்தமையும், கூட்டணியின் பகிஷ்கரிப்பு கோரிக்கை மட்டக்களப்பு தொகுதியைபொறுத்தவரை ஸ்ரீல சு. கட்சிக்கும். ஐ தே, கட்சிக்கும் சாதகமாகவே அமைந்திருக்கிறது. தமிழரசுக்கட்சியும் நீண்டநாளைய ஆதரவாளர்களை எல்லாம் அமைச்சர் இராசதுரை சந்தித்து ஐ.தே கட்சிக்கு ஆதரவு தரும்படி கோரிக்கை விடுத்ததாகத் தெரிய வருகிறது. கூட்டணி இத்தேர்தலை பகிஷ்கரிப்பதால் இக்கோரிக்கை நிச்சயம் வெற்றி அளிக்குமென்றே அவ் வட்டாரங்களில் நம்பப்படுகிறது. அதே வேளை அமைச்சர் இராசதுரைக்கு கடந்த 30வருடங்களாக ஆதரவு அளித்து வந்த இத்தொகுதி தமிழரசுக் கட்சிப்பிரமுகர்கள் அனைவரும் இன்று

நமது மட்டுநகர் நிருபர்
இரா. துரைரத்தினம்

71வீதம் இலங்கைத் தமிழர் இம் மாவட்டத்தைப் பொறுத்தவரை கூட்டணி கடந்த பொதுத் தேர்தலிலும் சரி, மாவட்ட சபைத் தேர்தலிலும் சரி 55வீதமான வாக்குகளைப்பெற்றபோதிலும் எதிர் வரும் ஜனதிபதித் தேர்தலில் கூட்டணியின் பகிஷ்கரிப்புக் கோரிக்கையின் கீழ் நின்று இந்த 55 வீதமானவர்களும் தேர்தலைப் பகிஷ்கரிப்பார்களா?

கடந்த பொதுத்தேர்தலில் கூட்டணியின் சார்பில் மட்டக்களப்பில் போட்டியிட்ட அமைச்சர் இராசதுரையின் அரசியல்கட்சி மாற்றமும், மாவட்ட சபைத் தேர்தலில் அமைச்சர் இராசதுரையின் கோரிக்கையை ஏற்றுச் செயல்படுவார்களா? கடந்த மாவட்டசபைத் தேர்தலில் அமைச்சர் மௌனமாக இருந்தார். பழைய கூட்டணி ஆதரவாளர்கள் மாவட்ட சபைத் தேர்தலில் கூட்டணியையே ஆதரித்தார்கள். இந்த ஜனதிபதித் தேர்தலில் அமைச்சர் திரு. இராசதுரை மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள சகல கிராமங்கள்தோறும் பிரசார வேலைகளில் ஈடுபட்டிருக்கிறர். இதனுல் கூட்டணிக்கு கடந்த மாவட்டசபைத் தேர்தல்களில் வாக்களித்தவர்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

# விடுதலைபற்றிய சிந்தனை வளரவேண்டும்

இலங்கை அந்நியரிடம் இருந்து விடுபட்டபின் கடந்த 35 ஆண்டுகளை எண்ணிப் பார்க்கிறேம். தமிழ்மக்களின் வாக்கு பறிக்கப்பட்டதுமுதல், தமிழ்மக்கள் இன்றுவரை அனுபவித்துவரும் இன்னல்களைக் கவனத்தில்கொண்டு பார்க்குமிடத்து தனிநாட்டு கோரிக்கைக்கு எவ்வாறு படிப்படியாகத் தள்ளப்பட்டோம் என்பதும் புலனுகும். அதாவது இக்கோரிக்கையை நாங்கள் வலிந்து கச்சை கட்டிக் கொண்டு முன்னுக்கு வைக்கவில்லை. காலஓட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கையே எமது பிரச்னைகளைத் தீர்க்கும் என்ற நிலைக்கு பரிணும வளர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறேம். அண்மைக்காலங்களில் நடைபெற்றுவரும்

## மக்கள் கருத்து

இனக்கலவரங்களும், நாடு கடத்தும் நாடகங்களும், வழிப்பறிகளும் எம்மை இக்கோரிக்கைக்கு முடிவாகத் தள்ளிவிட்டது.

தேர்தல்காலங்களில் தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களின் வெறறுப்பேச்சுக்களை கேட்டுக்கேட்டு காது புளித்துவிட்டது. நாம் புள்ளடிபோட்டுப் பழகிவிட்டோம். அடிக்கடி புள்ளடி போட்டு எமது ஒற்றுமையைக் காட்டவேண்டும் என என நினைப்பது தவறு. ஏனெனில் தனிநாட்டுக் கோரிக்கை, எமது கோரிக்கைகளின் பரிணும வளர்ச்சியில் ஏற்பட்ட கோரிக்கை. இக்கோரிக்கையை முன்வைத்து விடுதலைஇயக்கங்கள் வளர்ந்து வருகின்றன. தேர்தலில் நிற்பவர்களின் பங்கும், தேர்தலில் வெற்றிபெற்றவர்களின் பங்கும் விடுதலைப்பாதையில் எத்தகையதாக அமைந்தன? பாமரமக்களுக்கும் இவர்களுக்கும் தொடர்புஇருக்கிறதா? என சிந்திக்கவேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் அரசியல் அறிவும், விடுதலைஇயக்கங்கள் பற்றிய அறிவும் பெறவேண்டிய நிலைக்கு வந்துள்ளோம். அதாவது எமது விடுதலை பூரணத்துவ விடுதலையாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. எமது தனிநாட்டுக் கோரிக்கையை வென்றெடுக்க பூரணத்துவ விடுதலை அடைந்த நாடுகளின் விடுதலை இயக்கங்கள் பற்றிய அறிவையும், சர்வதேச அரசியல் சூழ்நிலைகள் பற்றிய அறிவையும் வளர்த்துக்கொள்ளவேண்டுமே தவிர தேர்தல் வெற்றுப் பேச்சுக்களைக் கேட்பதில் எதுவித் பிரயோசனமுமில்லை. எம்மத்தியில் வளர்ந்துவரும் விடுதலை இயக்கங்களின் செயல்பாடுகளைக் கவனத்தில்கொள்ள வேண்டும் அவை மக்கள் இயக்கமாக வளந்துவருவதையும் கவனத்தில் கொண்டு, எமது சிந்தனைகளையும் விடுதலை பற்றியவையாகவே வளர்க்கவேண்டும். நாம் எமது பழம் பெருமைகளைக் கூறி பெருமைப்பட்டுக்கொள்ளும் வேளையில், நம் முன்னுள்ள இக்காலகட்டத்திற்குத்தேவை

(5-ம் பக்கம் பார்க்க)

## ★ ஜனதிபதி தேர்தல்களம்

### ''பயங்கரவாத தடைச்சட்டத்தை

# கொப்பேகடுவவும் இடதுசாரிகளும் நீக்குவதாக உறுதியளித்துள்ளனர்''

### பண்டிதர் கா. பொ. கூறுகிறர்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக ஜனதிபதி தேர்தலில் போட்டியிடும் திரு. கொப்பேகடுவவும், மற்றும் இடதுசாரி அபேட்சகர்களும் வாக்குறுதியளித்துள்ளனர் ஆனல் ஆளும் கட்சியான ஐ. தே. க. இச் சட்டத்தை இன்னும் ஏன் நீக்கவில்லை?

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் தமது அலுவலகத்தில் நடைபெற்ற இளைஞர் பேரவை, மாணவர் பேரவைக் கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

ஜனதிபதி தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சிக்கும்—ஏனைய கட்சியினருக்குமிடையில் ஒரு பெரும் வேறுபாடு உண்டு. ஐக்கிய தேசியக்கட்சி ஆளும் அதிகாரமுடைய கட்சி ஏனைய கட்சிகள் ஆளும் அதிகாரம் இல்லாத கட்சிகள்

தமிழ் மக்கள் தொடர்ந்து போராடி வரும் அரசியல் விடுதலை பற்றி போட்டியிடும் இக் கட்சிகள் தங்கள் நிலையை கொள்கையை – கருத்தை திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன

சுயநிர்ணய உரிமை; இறைமை; பிரிவினை தனிநாடு முதலான பற்றியும் பேசியுள்ளேன். ஆனல் ஐக்கிய தேசியக் கட்சியோ தனது கொள்கையை இவற்றைப்போல இன்னும் வெளியிடாமலிருப்பதற்கு காரணம் யாது?

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் போட்டியிடும் திரு. கொப்பேகடுவ உட்பட மற்றும் இடதுசாரி கட்சிகள் யாவும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை ஒழித்துவிடுவோமென்று வாக்குறுதி கொடுத்துள்ளன.

''சிறிதுகாலத்துக்கு எனக் கொண்டுவந்து பின் நிரந்தரச் சட்டமாக்கிவைத்திருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இப்பயங்கரவாதச் சட்டத்தை இன்னும் ஏன் நீக்கவில்லை?

ஜனநாயகம் தர்மிஷ்டம் பேசும் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கொடிய பயங்கரவாதச் சட்டத்தை தமிழ்ப் பகுதிகளுக்கு வரமுன்னர் நீக்கிவிடுவாரா?

ஏனைய சிங்களக் கட்சிகள் யாவும் இதனை நீக்குவோம் என உறுதியளிக்கும்போது ஐக்கிய தேசியக் கட்சி ஏன் தயங்கவேண்டும்?

தமிழுக்கும் தேசிய மொழி அந்தஸ்து கொடுத்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டும், தமிழ் மொழிச் சட்ட உரிமைகளை நடைமுறைப் படுத்த ஒரு தமிழமைச்சரை நியமித்திருக்கிறோம் என்று பிரசாரம் செய்து கொண்டும் இந்த மொழி உரிமைகளை செயல்படுத்துவதற்கு வெளியிடவேண்டிய சுற்றறிக்கைகளை நான் பலமுறை இடித்துக் கேட்டும் இன்னும் வெளியிடாமல் தட்டிக்கழித்துக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றமடையச் செய்யும் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ்மக்கள் தரிப்பார்கள் என்று எண்ண முடியுமா?

''வேலைநீக்கம்செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் உத்தியோகத்தர்களும், சிங்களத் தேர்ச்சியின்மையால் பதவியிழந்த தமிழ் உத்தியோகத்தர்களும் எவ்வித நிவாரணமும் பெருமல் வாழவழியின்றித் துடிக்கின்றனர்கள். இக் காட்சியைக்காணும் எந்தத் தமிழனும் ஐக்கிய தேசியக் கட்சியில் வெறுப்பும் வேதனையும் கொள்ளாமல் இருக்கமுடியுமா?

''உயர்கல்வி அமைச்சராக இருக்கும் ஜனதிபதியவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டியவற்றை செய்விக்காமல் இருப்பதால், அப்பல்கலைக் கழக மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது.

''பயிற்சி மருத்துவசாலை ஆசிரியர்கள், உபகரணங்கள், கட்டிடங்கள் முதலியவற்றை தருமாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் வேண்டுகோள்விடுத்தும், இதுபற்றி பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறியபோது கவனிக்கப்படும் என்று தெரிவித்தும் உருப்படியாக எதுவும் செய்யப்படவில்லை.

''கமத்தொழில்பீடம் வர்த்தகமுகாமை கல்விப்பீடம், விளையாட்டரங்கு, நூல்நிலையம், மாணவர் நிலையம் ஆகியன இன்னும் அமைக்கப்படவில்லை பலகோடி ரூபா செலவில்பலமாவட்டங்களில்செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டம் ஒன்றேனும் தமிழ் மாவட்டங்களில் செயல்படத் தொடங்கியுள்ளதா?

ஆண்டுகள் தோறும் பல கோடிக்கணக்கான ரூபாக்களை செலவுசெய்து தென் பகுதியில் பாலங்களையும், தெருக்களையும் அமைக்கும் அரசாங்கம் ஒருசதமேனும் மகாதேவா பாலத்தை அமைக்க ஒதுக்கியதா? [மா]

### ''ஜனதிபதி தேர்தலை

# சர்வஜன வாக்கெடுப்பாக பயன்படுத்த வேண்டும்''

### தம்பிலுவில் கூட்டத்தில் குமார்

(மட்டக்களப்பு)

''மலைநாடு மற்றும் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களும் ஜனதிபதி தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாக பயன்படுத்தவேண்டும்.''

பொத்துவில் தம்பிலுவில் நேற்று முன்தினம் நடந்த ஜனதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஜனதிபதி வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. வைரமுத்து சதாசிவம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. குமார்பொன்னம்பலம் மேலும் கூறியதாவது. தமிழ் மகளின் வீரத்தைக் காட்டவும், தமிழ்மக்கள் பகடைக்காய்களல்லவென்பதை காட்டுவதற்கும் நாடு முழுவதிலுமுள்ள தமிழ் மக்களிடமிருந்து தமிழ் ஈழ ஆணையை பெறுவதற்குமே இத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

கடந்தபொதுத் தேர்தல் வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களிடமிருந்துதான் தமிழ் ஈழ ஆணை பெறப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழும் தமிழ்ப்பேசும் மக்களின் ஆணையையும் பெறவேண்டும் என்பதற்காகவே போட்டியிடுகின்றேன். தமிழ் தேசிய இனத்தின் பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

சட்டத்தரணி எம். மோதிலால் நேரு, திரு. ரி. மகேந்திரராஜா, திரு. கே. சுந்த[illegible] ஆகியோரும் பேசினர்கள். (க)

# ''பகிஷ்கரிப்பில் ஈடுபடாது ஜே. ஆரை ஆதரித்து வாக்களிக்கவேண்டும்''

### சுகாதாரசேவை பொதுஊழியர்சங்கம் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''இந் நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கக் கூடிய சக்தியும் தகுதியும் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கே இருக்கின்றது' ஆகவே தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாது தங்கள் வாக்குகளை திரு. ஜெயவர்த்தனவுக்கே அளிக்கவேண்டும்''

இவ்வாறு ஜனதிபதி தேர்தலை முன்னிட்டு சுகாதார சேவை பொது ஊழியர்சங்க வடபிரதேசக்கிளை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிளையின் சார்பில் அதன் செயலாளர் திரு. கே. செல்வராசா வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:– தமிழ் மக்களின் வாக்குகளினல் தான் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வெற்றி நிர்ணயிக்கப்படவேண்டும். சகல இன மக்களையும் ஒற்றுமைப்படுத்தி ஒரு சிறந்த தார்மீக ஆட்சியை இந்நாட்டில் நிறுவுவதற்கு அவர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எமது பகுதியிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஆதரவு நல்கி தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும். அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டிருக்கும் தமிழ் மொழிக்கு தேசியமொழி அந்தஸ்து ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும். இந்த அரசு தமிழ் மக்களின் நலன்கருதி மேலும் பல திட்டங்களை செயற்படுத்துவதற்கு நாம் ஊக்கமும் ஆக்கமும் கொடுக்க வேண்டியது எமது கடமையாகும். ஆகவே அகில இலங்கையிலும் பெரும் செல்வாக்குப்பெற்ற தலைவரான திரு. ஜெயவர்த்தனவுக்கு தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை வழங்கி உதவவேண்டும்.''

(க)

## ஜனதிபதி தேர்தலில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அனைவருமோ, அல்லதுபொதுத் தேர்தலில் வாக்களித்த அனைவருமோ கூட்டணியின் பகிஷ்கரிப்பு கோரிக்கையை ஏற்று தேர்தலைப் பகிஷ்கரிப்பார்கள் என்பது சந்தேகமே. அதே வேளை தமிழ்மகன் ஒருவர்தேர்தலில் போட்டியிடுகிறரே என்ற அனுதாப நோக்கமும் சிலரிடையே இல்லாமலில்லை. அதேவேளை கடந்த மாவட்ட சபைத் தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. இராஜ[illegible] செல்வநாயகம் போன்றோர் கூட்டணியையே ஆதரித்தனர். ஆகவே கூட்டணி தேர்தலில் நிற்காததால் அந்த நன்றிக்கடனுக ஸ்ரீ ல. சு. கட்சியை ஆதரிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் சிலரிடையே எழுந்துள்ளது. ஆகவே தேர்தல் பகிஷ்கரிப்பு மட்டக்களப்பைப் பொறுத்த வரை பூரணவெற்றி அளிக்காவிட்டாலும் 40 வீதமான மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பார்கள் என்றேஅரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதைவிடுத்து தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில் இன்று சூருவளி வேகத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பது ஐ. தே. கட்சி மாத்திரமே. கல்குடாத் தொகுதியிலும் பட்டிருப்பு தொகுதியிலும் கடந்தவாரம் தேர்தல் பிரசாரங்களை அமைச்சர் தேவநாயகம் ஆரம்பித்து வைத்தார். இத் தொகுதிகளிலுள்ள சகல கிராமங்கள் தோறும் பிரசாரக் கூட்டங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகிறது. அதே போல மட்டக்களப்புதொகுதியில் அமைச்சர் இராசதுரை ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் மட்டத்திலும் பழைய கூட்டணி ஆதரவாளர்கள் மட்டத்திலும் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளார். அமைச்சர் இராசுவின் இந்த அண்மைக்கால உத்வேகம் கூட்டணியின் நீண்டகாலக்கோட்டைகள் என வர்ணிக்கப்பட்ட கிராமங்கள் பல ஐ. தே. கட்சி ஆதரவாளர்களாக மாற்றப்படுகின்ற நிலையை உருவாகியிருப்பதும் உண்மையே!

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களைப் பொறுத்தவரை அண்மைக்காலத்தில் அவர்கள் மத்தியில் ஜனத்தா விமுக்தி பெரமுனையின் செல்வாக்கும் அதிகரித்து வருவது கண்கூடு. குறிப்பாக காத்தான்குடி முஸ்லீம்கள் மத்தியில் ரோகண விஜயவீராவுக்கு ஆதரவு அதிகரித்து வருவதை அண்மையில் காத்தான்குடியில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டம் சான்று பகர்வதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஆனல் ஐ. தே. கட்சியின் ஆதரவோ, ஸ்ரீலங்கா சு. கட்சியின் ஆதரவோ குன்றிவிட்டதெனக் கூறுவதற்கில்லை.

ஸ்ரீலங்கா சு. கட்சிக்கு ஆதரவு தேடி ஜனப் அஹமட்டும், ஐ. தே. கட்சிக்குஆதரவுதேடி டாக்டர் பரீட் மீரசலெப்பையும் பிரசாரங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனல் முஸ்லிம்களைப் பொறுத்தவரை கூட்டணியின் பகிஷ்கரிப்பு கோஷத்திற்கோ, இடதுசாரி வேட்பாளர்களான கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கோ, வாசுதேவ நாணயக்காராவுக்கோ அங்கு ஆதரவு அறவே இல்லை எனலாம்.

ஜனதிபதித் தேர்தலில் ஒரே ஒரு தமிழரான குமார் பொன்னம்பலத்தையே ஆதரிக்க வேண்டுமென ஒரு சிலர் குரல் எழுப்பினலும் இந்த குறுகிய காலத்தில் குமார் பொன்னம்பலத்தைப் பற்றியோ, தமிழ்க் காங்கிரஸ் பற்றியோ மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுதல் முடியாத ஒன்று. இவை இரண்டும் இம்மாவட்ட மக்களுக்கு புதிய ஒன்றே. வட இலங்கை மக்கள் மத்தியில் தமிழ்க்காங்கிரஸ் அறிமுகமாகி இருக்கும் அளவிற்கு கிழக்கிலங்கையில் அது அறிமுகமாகவில்லை. ஆகவே தமிழ் வேட்பாளர் என்ற போதிலும் குமார் எதிர்பார்க்கும் வாக்குகள் கிடைக்கும் என்பது சந்தேகமே.

ஆகவே மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரை கூட்டணியின்பகிஷ்கரிப்புக்கோஷம் வெற்றியளிக்காதென்பதும், இதன்மூலம் கூட்டணியின் ஆதரவாளர்கள் பலர் வேறு கட்சிகளுக்கு மாற்றப்படுகின்ற சங்கதிகளும், கூட்டணிக்கு எதிர்காலத்தில் பாதிப்பையே உருவாக்கும். அதேவேளை ஐ. தே. கட்சி கடந்த காலங்களில் பெற்ற ஆதரவை விட கூடுதலான ஆதரவைப்பெறலாம்.

(மிகுதி நாளை)

## விடுதலைபற்றிய...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யான எமது செயற்பாடுகளை மறந்துவிடுகிறோம். கால ஓட்டத்தில் பல அமைப்புமுறைகளை மக்கள் கடந்துவந்துவிட்டார்கள். இன்றைய சூழலில் தமிழ் மக்கள் தமது விடுதலைப் பாதையை எவ்வாறு அமைத்து அதனூடாகத் தமது கோரிக்கையை வென்றெடுத்து ஒரு சமத்துவ சமதர்ம ஆட்சியை உருவாக்கமுடியும் எனச் சிந்திக்கவேண்டும்.

இக்காலகட்டத்தில் நாம் இவ்வாறு சிந்திக்கத்தவறின், உலகில் சில இனமக்களுக்கும் நடக்கும் இன்னல்களே எமக்கும் ஏற்படும். பாலஸ்தீனியர்கள், பாலஸ்தீனத்தை இழந்து இன்று அகதிகளாகக் கூட வாழமுடியாத நிலை. உலக நாடுகள் அனுதாபங்களும், கண்டனங்களுமே தெரிவிக்கும் ஆனல் அவர்களின் விடுதலைப் பாதையில் பூரண பங்கு கொள்வதில்லை. எனவே நாம் இன்றையநிலையில் எமது விடுதலை பற்றிய சிந்தனைகளை வளர்த்துச் செயற்படாமல் விட்டால் பின்பு பலரின் அனுதாபத்தைப் பெற்றவர்களாகி அகதிகளாக வாழும் நிலை ஏற்படும். இவை எம் கண்முன் நடக்கும் காட்சிகள்.

கே. ஸ்ரீதரன்
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## கருத்தரங்கும் ஞானஒடுக்கமும்

(அரியாலை)

இலங்கை கிறிஸ்தவ ஆசிரிய சங்க வடபிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் பணி புரியும் புரட்டாஸ்தாந்து கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், ஞானஒடுக்கமும் நவம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். பரி. யோவான் கல்லூரி ஆசிரிய சங்க அறையில் வடபிரதேசக்கிளையின் உபதலைவர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் நவம்பர் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண வகுப்பில் கல்வி கற்கும் கிறிஸ்தவ மாணவ மாணவிகளுக்கிடையில் கிறிஸ்தவ சமய பாடத்தில் பயிற்சிப் பரீட்சையொன்றை நடாத்துவதெனவும், இதுபற்றி வடபிரதேச கல்விப்பணிப்பாளருடன் கலந்துரையாடி ஆவன செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. (மா)

# தொகுதி வேலைகள் முழுமையாக செய்ய முடியவில்லையாம்

## தீவுப்பகுதி எம். பி. கூறும் காரணம்

(மண்டைதீவு)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் பெரும்பகுதியை மாவட்ட முதலீட்டு திட்டங்களுக்கு ஒதுக்கியுள்ளது. இதனால் எனது தொகுதி வேலைகளை முழுமையாக செய்ய முடியாத நிலையில் இருக்கின்றேன். இதுசம்பந்தமாக யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக் குழுவுடன் போராடிவருகின்றேன்.

இவ்வாறு வேலணைசரஸ்வதி வித்தியாசாலையில் தீவுப்பகுதி தெற்கு உதவிஅரசாங்கஅதிபர் பிரிவிலுள்ள கிராமோதய சபை உறுப்பினர்களின் பயிற்சிக் கூட்டம் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி நாகராசா தலைமையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் கிராமச்சபைகளுக்கு விசேட ஆணையாளர்களை நியமிக்கும்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளை கேட்டேநியமனம்செய்து வந்தார்கள். மாவட்ட அபிவிருத்திசபை வந்தபிறகு சபையின் நிறைவேற்றுக்குழு எம்மை கேளாமல் உபஅலுவலங்களுக்கு பொறுப்பானவர்களை தானே நியமித்துள்ளது. இதனால் பல குறைபாடுகள் அங்கு நிலவிவருகின்றன.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக் குழுத் தலைவரும் மாவட்ட அமைச்சருமான திரு. யு. பி. விஜயக்கோன் யாழ் நகரில் நிரந்தரமாக தங்குவதில்லை. அவர் இங்கு வரும் நேரங்களில் தான் நிறைவேற்று குழு கூட்டங்களை கூட்டுகின்றது. இதனால் பல அபிவிருத்தி திட்டங்கள் தாமதம் அடைந்து வருகின்றது,

அரசாங்கத்தின் அமைச்சர்களின் அதிகாரங்கள் பலவற்றை விரைவில் மாவட்ட அபிவிருத்திசபையின் நிறைவேற்று குழுவுக்கு வழங்கப்பட விருப்பதாக தெரியவருகின்றது என்றார்.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபை தலைவர் திரு நா. சிவராசசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துகையில்,

மாவட்ட அபிவிருத்திசபையின் உப அலுவலகங்களின் நிர்வாகப்பொறுப்புகளை அப்பகுதி கிராமோதய சபை தலைவர்களுடன் ஆலோசித்து பொருத்தமான ஒருவரை அப்பகுதி எம் பியின் சிபார்சுடன் நியமிக்கவேண்டும். இவ்வாறு செய்தால்மட்டுமே கிராமப்புறங்களில் மாவட்டசபைச் தொழிற்பாடுகளில் அப்பகுதி மக்கள் நேரடியாக பங்குபற்றுகின்ற நிலையை ஏற்படுத்த முடியும். மக்களுக்கு பதில் சொல்லகடமைப்பட்டவர்கள்-இல்லாத அரசாங்க ஊழியர்களை உப அலுவலங்களில் பொறுப்பாளர்களாக நியமித்தால் அவர்கள் மக்களின் பிரச்னைகளில் முனைப்போடு செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியையே மாவட்ட சபை மேற்கொள்ளுகின்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்பார்க்காமல் எமது அரச நிதியையும் வெளிநாட்டு உதவியையும் முயன்று பெறுகின்ற கடமையை மாவட்டசபை நிறைவேற்ற வேண்டும். அதை விடுத்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய பணத்தை வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தினல் கிராமப்புறங்களின் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி பெற முடியாது. இதனல் பின்தங்கிய கிராமங்கள் மிகவும் பாதிப்பு அடைய நேரிடும் என்றார்.

## மற்றுமொரு நவீன சந்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் 240 கடைகளைக் கொண்ட நவீன சந்தை ஒன்றை அமைக்க யாழ். பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் முடிவு செய்துள்ளது.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் அதன் தலைவரும், கோப்பாய் எம். பியுமான திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது நவீன சந்தை ஒன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

சுதேசிய வைத்திய மருந்தகம் ஒன்றை ஆரம்பிப்பதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (மா)

## நடவடிக்கை

(புலோலி)

ஸ்ரீவல்லிபுரஆழ்வார் வருடாந்த மகோற்சவத்தையொட்டி ஆலயத்திற்குவருகைதரவுள்ள பக்தஅடியார்களின் நன்மைகருதி விற்பனை அபிவிருத்தித்திணைக்களம் ஆலயத்தில் தற்காலிக விற்பனைக் கிளையொன்றை நிறுவியுள்ளது.

## விதை உருளைக்கிழங்கு வாங்க நடவடிக்கை

(புலோலி)

பளை கமநலச் சேவை நிலைய பதினொரு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவுகளின் காலபோகக் கூட்டங்களும் முடிவடைந்ததைத் தொடர்ந்து காலபோக வேளாண்மை ஆரம்ப நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை பளை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. வீ. இராசையா மேற்கொண்டு வருகிறார்.

இதற்கிணங்க விவசாயிகளுக்கு விதைநெல் விவசாய இரசாயனப்பொருட்கள், விவசாய உபகரணங்கள் என்பனவற்றை வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனல் பளை கமநலச்சேவை பகுதி விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு விநியோகம் செய்யப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினல் இப்பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இப்பகுதி செயற்படுதிட்டத்தில் விதை உருளைக்கிழங்கு தேவைபற்றிக் குறிப்பிட்டிருந்தபோதும் இவ் விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு விநியோகத்திற்கானநடவடிக்கைகளைத்திணைக்களம் மேற்கொள்ளவில்லையாம்.

இவ்விதை உருளைக்கிழங்கு விநியோகம்பற்றி கிளிநொச்சி எம்.பி. திரு. வி. ஆனந்தசங்கரி, கமநலசேவைத் திணைக்களம் என்பனவற்றிடம் புகார் செய்திருந்தும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

## 'சூரியர்' புதல்வி சட்டத்தரணி

[கொழும்பு]

முன்னுள் தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரின் புதல்வி செல்வ லக்ஷ்மி உமா சகுந்தலா உயர்நீதிமன்றத்தில், பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் தலைமையிலான நீதியரசர்கள் முன்னியில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். (இ)

# வாத்தி வேலைக்கு —சலாம்!

கல்விச் சேவையில் 1944-ல் பெப்ரவரி மாதம் 1-ம் திகதி நுழைந்தேன்-ஆசிரியனுக, சரியாகச் சொன்னல் எனை இத் தொழிலில் புகுத்திவிட்ட ஆசிரியர் திரு. ரி. தங்கராசா முதல்நாளே என்னைப் பதவியேற்கும்படி வற்புறுத்தி முதல்நாள் பிற்பகலே என்னை இத்தொழிலில் ஈடுபடுத்திவிட்டார்-மறுநாள் அட்டமி என்று காரணம் காட்டி. இதுநடந்தது உடுவில் மான் ஆங்கிலப் பாடசாலையில். அப்போது எனக்கு வயது 19 வருடம் 4 மாதம். அன்றிலிருந்து இன்று ஓய்வுபெறும்வரை குதூகலமான அனுபவங்கள்-சுவையானவை.

●

அப்போது என்னுடன் ஆசிரியனுயிருந்த வசந்தகுலசிங்கம் என்பவர் ஒரு பையனுக்கு பிரம்பினல் அடித்துவிட்டார் [இப்போது முடியுமோ?) பையனே கழுத்தில் தங்கச்சங்கிலி, அட்சரச்கூடு, கையில் காப்பு முதலியவற்றுடன் பாடசாலைக்கு வருவபவன். தகப்பன் சண்டியன். மதியவேளை முடிந்து பிற்பகல் வகுப்புகள் ஆரம்பமாகும்

### தேவன் - யாழ்ப்பாணம்

சமயம். முதல்மணி அடித்தது. பையனுடன் தகப்பனும் 'இரண்டு டோஸ்' போட்டு விட்டு வந்துவிட்டான். 'என்ரை பொடியனுக்குஅடிக்க முடியுமோ?' என்று வகுப்புக்குள் நுழைய இருந்த ஆசிரியரைத்தடுத்தாட் கொண்டான்' குஞ்சு குருமான் எல்லாம் கலகம் பிறக்கப்போகிறது என்று குவிந்துவிட்டன. தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த எனக்குப் பொறுக்கவில்லை. எழுந்து சென்று ஒருவனுக்கு கையால் 'பளீரெ'ன்று விட்டேன் ஒன்று. 'மணி அடித்தது கேட்கவில்லையோ?' என்ற அதட்டல். எல்லோரும் வகுப்பறைகளுக்கு ஓட்டம். அங்கேயிருந்துகொண்டு இங்கேதான் அவர்களின் கண்கள். வலது கையால் மடியில் எட்டிப்பிடித்தேன். 'தரதர'வென்று ஒழுங்கைக்கு இழுத்துச்சென்றேன். 'மின்னல் அடி வீரன்' ஆகிவிட்டேன் அல்லவா 'கிரேக்க' மொழியில் பேசினேன். 'இந்தா, உனக்குமட்டும் தான் இதெல்லாம் தெரியும் என்று நினைக்காதை. உன்னிலும் பார்க்க வடிவாய்ப் பேசுவம். ஆனல் உன்னுடைய பிள்ளை பழுதாய்ப்போமெண்டு அதுகளுக்கு முன்னலே பேசுறதில்லை...... இப்ப உனக்கு என்ன வேணும்? உன்னுடைய மகனுக்குஅடிக்காமல் கொஞ்சி வளர்க்கிற ஒரு பள்ளிக்கூடம் வேணும்...கொஞ்சம் பொறு அதிபர் வருவார். சொல்லிச் சர்டிபிக்கேட்டை வாங்கித் தாறேன். தேடிப்பார்த்து எங்கையாவது சேர்' என்றேன். 'இல்லை, சார். அடிக்கலாம். கையிலை அடிக்கலாம். ஆனல் உச்சந்தலையிலை அடிக்கிறதே' என்று வழிக்கு வந்தான். எனக்கு வெற்றி. அதிபர் சைக்கிளில் வந்த கொண்டிருந்தார். திரு. கிறிஸ்தோபர் கிறிஸ்மஸ் ராஜா. 'சார், இவருக்கு மகனுடைய சேர்டிபிக்கேட் வேணுமாம்' என் கோரிக்கை. அவருக்கு ஏதோ விஷயம் விளங்கிவிட்டது. 'அதுக்கென்ன? குடுத்துவிடுவம்' என்ருர். 'இல்லை ஐயா, நான் சொல்ல வந்தது என்னென்டால்...' மிஞ்சின தகப்பனைக் செஞ்சவைத்துவிட்டேன். கதை சுலபமாக முடிந்தது.

●

அடித்து படிப்பிக்கலாம்என்று நான் அப்போது எண்ணியிருக்கிறேன் போலும். அல்லது நான் கொடுத்த வேலையைச் செய்யாமல் வந்ததால் என் சுயகௌரவம் பாதிக்கப்பட்டதுபோலும்! சிரேஷ்ட தராதரப் பத்திர கணித வகுப்பில் (இப்போது க. பொ. த. ப.) ஒருவனுக்கு இரண்டுகொடுத்துவிட்டேன். இத்துறையில் குருவும் வழிகாட்டியுமான திரு. தங்கராசா மறுநாள் 'நேற்று இன்னுருக்கு நீங்கள் அடிச்சனீங்களே?' என்று மெதுவாகக் கேட்டார். 'அவன் கல்யாணம் முடிச்சு ஒரு பிள்ளையுமிருக்கு' என்ருர். அதன்பின்தான் இரு கல்யாணமான மாணவர்கள் என் வகுப்பில் இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். என்னிடம் அடிவாங்கிய பையனை என் மனக்கண்முன் நிறுத்தினேன். செருப்பு, வேஷ்டி, நீளக்கை ஷேர்ட், மடித்தசால்வை நடுவகிடு—சரிதான்.

● ● ●

என்னிடம் கற்ற மாணவர்களில் சிலர்: 1946 ஆண்டுப் பதிப்பு; தட்டாதெருவில் நிற்கிறேன்; சைக்கிளில் வருகிருன். தேசிய உடை, சந்தணப்பொட்டு, சைக்கிளை ஸ்ராண்டில் நிறுத்துகிருன். செருப்பைக் கழற்றிப் பக்கத்தில் விடுகிருன். என் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிக்கிருன் ''சீ! சீ! இது என்ன?'' வழியில், தெருவில்? என்று ஒதுங்குகிறேன். ''இல்லை. இது நான் என் குருவுக்குச் செலுத்தும் அஞ்சலி'' என்று சொல்லிவிட்டு தன்பாட்டுக்குப் போகிருன்.

1956 ஆண்டுப் பதிப்பு; அதே. தட்டாதெருக் சந்தியில் நிற்கிறேன். ''எடே! தேவன் மாஸ்டர் நிற்கிருற்ரு'' என்ெரு குரல் திரும்பிப் பார்க்கிறேன் பற்றவைத்த சிகரெட்டை முதுகுச்குப்பின்னல் கைகளினல பொத்திபிடித்தபடி எனக்கு முகத்தைக் சாட்டியபடி திரும்பித் திரும்பிச் சிரித்தபடி நடக்கிருன் சிலசமயம் 'சார்' என்கின்ருன். வாய்க்குள்ளிருந்து புகை 'கூட்ஸ் வண்டியிலிருந்து' புறப்படுவதுபோல் கத்தை, கத்தையாக வருகிறது

1966 ஆண்டுப்பதிப்பு: அதே இடம். பழைய மாணவன் ஒருவன் சைக்கிளில் வருகிருன். காலை ஊன்றிக்கொண்டு என் பக்கத்தில் நிற்கிருன். ''சார், கான் ஐ ஹாவ் யுவர் லைட் பிளீஸ்'' என்று கேட்கிருன்.

1976 ஆண்டுப் பதிப்பு அதே யிடத்தில் தான் பழைய மாணவன் ஒருவன் வருகிருன். அவன் வாயிலிருந்து ஏதோவொரு நெடி. வலதுகை ஆள் காட்டிவிரலையும் நடுவிரலையும் என ஷேர்ட்டின் மார்புப்பைக்குள் விடுகிருன். அவனுக்கு என்சட்டைப் பையில் சிகரட் பாக்கட் இருப்பது தெரியும். ''ஐ ஆம் ஹாவிங் ஏ சிகரட் ஓஃப் யூ சார்'' என்கிருன். அவன் ஏன் ''சார்'' என்று சொன்னன். சும்மா சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு போயிருக்கலாமே என்று குறுகுகிறேன்.

1986 ஆண்டுப்பதிப்பு: ...... ...........?.........(அந்த இடத்தில் நான் நிற்கமாட்டேன்).

க. பொ. த. ப. பரீட்சைமண்டபம். நான். மேற்பார்வையாளன் பல்தேர்வு வினவேளை அளிக்கப்படவேண்டிய நேரம் 45 நிமிடங்கள்.

வினத்தாள்களை விநியோகிக்கிறேன். டரீட்சார்த்தி விரித்துப் பார்க்கிருன். குழந்தைகளைப்படுக்க வைக்கும் ஒரு தடுக்கின் அளவு (இப்போது தடுக்கு என்ெரு பொருள் உண்டோ) விரித்தபடி மேசையில் வைத்தால் மேசை முழுவதையும் மூடிவிடும். பக்குவமாக மடித்துப் பைக்குள் வைக்கிருன். புள்ளடியிடும் தாளில் 2,2,3,4 என்று ஏதோ இலக்கங்களுக்குக் கீழே புள்ளடிகளை இடுகிருன். 10 நிமிஷங்களுக்குள் அவன் வேலை முடி

[7ம் பக்கம் பார்க்க]

தொலைக்காட்சி சேவையில் மீண்டும் தமிழ் திரைப்படங்கள் காண்பிக்கப்படுவதனல்

நீங்கள் சிக்கனமாகவும், தெளிவாகவும், வசதியாகவும் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு

சாப் (SHARP) கறுப்பு / வெள்ளை -- வர்ண தொலைக்காட்சிப் பெட்டிகள்

ஹையோ ஸ்ரார் (HYO STAR)
(No. 1 KOREAN T. V.)

கறுப்பு/வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள்

வாங்கிப் பயனடையுங்கள்

வடபகுதி விநியோகஸ்தர்கள் :

ஈஸ்வர் கோப்பரேசன்

18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 23308

யாழ். மாவட்ட

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும்பயிற்சிவகுப்பு

(அரியாலை)

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் யாழ் இந்துக்கல்லூரியில் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடாத்தி வருகிறது

மத்தியஸ்தர் சங்கத்தலைவர் திரு. இ. கனகலிங்கம் தலைமையில் நடைபெறும் இப் பயிற்சி வகுப்புகளில் பயிற்சியாளர்களுக்குச் சிரேஷ்டமத்தியஸ்தர்கள் பயிற்சியளித்து வருகிறார்கள்.

ஞாயிறுதோறும் இப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. தகுதிபெற்ற மத்தியஸ்தர்களும் மத்தியஸ்தர்களாக வரவிரும்பும் பயிற்சியாளர்களும் இதில் பயிற்சிபெற்று வருகிறார்கள்.

இந்தப்பயிற்சி வகுப்பகளில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்கள்அடுத்தமாதம்ஸ்ரீலங்கா மத்தியஸ்தர் சங்கத்தினால் நடாத்தப்படவிருக்கும் மத்தியஸ்தர் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கிறார்கள். இதற்கான விண்ணப்பங்களை யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கம் அடுத்தவாரம் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்துள்ளது.

பயிற்சியாளர்களுக்கான இப்பயிற்சி வகுப்புகளை மத்தியஸ்தர்சங்கத் துணைச்செயலாளர் திரு. எஸ். ஜெயரத்தினம், விளையாட்டுச் சங்கச் செயலாளர் கப்டன் என். சோமசுந்தரத்தின் உதவியுடன் செய்துவருகிறார். (அ)

## 26 ஊழியர் கைது

சென்னை, செப் 28

தஞ்சாவூர் அரசுஅலுவலகம் முன் மறியல் செய்த 26 அரச ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## சங்கச்செய்திகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. இ. அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கீழ்க்காண்போர் பரிபாலன சபைக்குப் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் த. தாமோதரம்பிள்ளை, உபதலைவர்; க. இராமச்சந்திரன், செயலாளர் ப. பசுபதி, உபசெயலாளர் ந. கமலநாதன், பொருளாளர் ம. பேரம்பலம். உறுப்பினர்கள்: ச. தில்லை நடராசா, இ. தருமராசா, சி. சந்திரசேகரம், நா. மருதயனூர். ஆ. சதாசிவம், பொ. தெய்வேந்திரம்.

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)
1-10-82 முதல்
பாக்கியராஜ்- சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்–சுபாஷினி
பாலைவனச்சோலை

வெஸ்லி (மானிப்பாய்)
30-ம் திகதி வரை
நிறம்மாறுத பூக்கள்
1-10-82 முதல்
முடிசூடா மன்னன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
அசோகன் -- மணிமாலா
கார்த்திகைத் தீபம்

றீகல் [யாழ்.நகர்]
2-வது ஹவுஸ்புல் வாரம். 10-30, 2-30, 6-15, 9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி [யாழ்.நகர்]
Daily 5 shows
THE BODY
Strictly for Adults
Color-Brand New Print

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ராஜன்–புஷ்பலதா
புகுந்த வீடு

ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
ஜெமினி – சரோஜாதேவி – நாகேஷ்
பணமா பாசமா

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 13ம் திகதி

புதன்கிழமை

(29—9—82)

மேடம்: புதுநம்பிக்கையுடன், வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள் தெய்வத்தின் அருளும் கிடைக்கும், தங்கள் செயற்திறமை மற்றவர்களை திகைக்க வைக்கும்.

இடபம்: இதயத்தில்மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். மத்திய சுகத்துடன் தொழில்துறையிலும் வெற்றிகிடைக்கும்.

மிதுனம்: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும். போக்குவரத்து விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். திடீர்திருப்பம் உங்களைத் திகைக்கவைக்கலாம்.

கடகம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் இடம்பெறும் எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதாரண சூழ்நிலை உருவாகும்.

சிங்கம்; தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விபரீதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும். கலகச் செய்திக்கும் இடமுண்டு.

கன்னி: பரம்பொருளின் அருளுக்கும் இடமுண்டு பரோபகார சிந்தை தலைதூக்கும். பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களின் ஆதரவைப்பெறுவர்

துலாம்: திருதிப்கரமான மாற்றங்கட்கும் இடமுண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கை மூலம் பணம் தேடிக்கொள்வீர்கள்.

விருச்சிகம்: மனநிறைவுக்கும் இடமுண்டு மதிப்பும் உயரும். அறிவாற்றலால் அரசபோகமும் கிடைக்கும். வாழ்க்கையில் திருப்தியும் நிலவும்,

தனு: பாணதயில் பழுதுமுண்டு. பகைவர்கள் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்குமிஞ்சியதாகவே இருக்கும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

மகரம்: இனிக்கப்பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும் பிறந்தகத்தின் நினைவு திடீரெனத் தலைதூக்கும். கடமையில் சோர்வு தென்படும்.

கும்பம்: இல்லத்தில்இனிமையானநிகழ்ச்சிகள் இடம்பெறும் இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்

மீனம்: அமைதிக்குப் பங்கம் உண்டு. சம்பவங்களும் திடீர் ஏற்படலாம். நெருங்கிய உறவினர்ஒருவருடைய உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வாத்தி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்துவிட்டது. அவன் என்னைப் பார்க்கிறான் நான் அவனைப் பார்க்கிறேன் கையொப்பப் படிவம், அடையாள அட்டை ஆகியவத்றைக் கவனிக்க நோக்குநரையும் அனுப்ப முடியாது.

இருவரும் இனி அரைமணி நேரத்துக்கு என்ன செய்வது? உடுத்த வினைத்தாளையும் கொடுக்கக் கூடாதே!

★ ★ ★

டிசம்பர் விடுமுறை முடித்து தைப்பொங்கலும் கழித்து பாடசாலைகள் மறு நாள் திறக்கப்படஇருக்கின்றன. பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு என்று நீண்ட விடுமுறை ஒழுங்கையில் 'கிளாக்கர்' நிற்கிறார். வாயெல்லாம் பல்.

"என்ன இன்றைக்கு வெகு பூரிப்பாய் காணப்படுகிறீர்கள்?" இதுநான்.

"உங்களுக்குத் தெரியாதே?" இது கிளாக்கர்.

"என்ன?"

"நாளைக்குப் பள்ளிக்கூடங்களெல்லே துவங்குது"

"அதுக்கு உங்களுக்கென்ன"

"பொடியன் பள்ளிக்குப் போவிடுவாங்கள். இவ்வளவு நாளும் அவங்கள் படுத்தின பாடு. பண்ணின அட்டாதுட்டித்தனம்.வீடை ரெண்டாக்கி ஒருத்தரையும் இருக்கவிட மாட்டன் எண்டுட்டான்கள்"

பெற்றோரின் நிலை குறித்து மனத்துக்குள் சிரித்துக் கொள்கிறேன்.

இனியும் யாராவது சொல்லப் போகிறீர்களா ஆசிரியத் தொழில் உப்புச்சப்பற்றது, அலுப்புத்தருவது, வேப்பங்காய்போன்றது என்று?

சிங்கள தேர்ச்சி பரீட்சை:

# இறுதித் தேதிமுடிந்தபின் படிவம் கிடைத்தது!

(பண்டத்தரிப்பு

அரசாங்க ஊழியர்களுக்காக நடாத்தப்படும் சிங்கள தேர்ச்சிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகவிண்ணப்பப்பத்திரம் அனுப்புமாறு கோரி எழுதியவருக்கு பரீட்சை விண்ணப்பதேதி முடிவடைந்து மூன்று தினங்களின் பின்பு பரீட்சைப் பகுதி விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைத்துள்ளது.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும்மருத்துவமாது செல்வி அலட்டா சவரிமுத்து எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் சிங்கள மொழி வாய்மொழிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக பிரவேசபத்திரங்களை அனுப்பி வைக்குமாறு கொழும்பிலுள்ள பரீட்சை ஆணையாளருக்கு தமதுபொறுப்பதிகாரி ஊடாக விண்ணப்பித்திருந்தார்

இம்மாதம் 20ம் திகதி இதற்கான விண்ணப்பிக்கும் இறுதித் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனுல் விண்ணப்பப் படிவங்களை கொழும்பிலுள்ள பரீட்சை திணைக்களம் இம்மாதம் 23ம் திகதியே அனுப்பி வைத்ததாம் இந்த சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையாததினுல் இவரது வருடாந்த சம்பள உயர்வு, பதவி நிரந்தரம் என்பன போன்றவை இதுவரை வழங்கப்படாதிருப்பது குறிப்பிடத்தக்கது (அ)

# மாதிரிகிராமத்திற்கு காணிகள் சுவீகரிக்கப்படும்

(பண்டத்தரிப்பு

வட்டுக்கோட்டை தொகுதியில் மாதிரிக் கிராமமாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ''சாந்தை'' கிராமத்தில் மாதிரிக்கிராமம் நிறுவும் வேலைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது

மறைந்த வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. அமரர் திரு. தா. திருநாவுக்கரசு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பின்தங்கியநிலையிலுள்ள சாந்தைக் கிராமத்தை வட்டுத் தொகுதிக்கான மாதிரிக்கிராமமாக அரசாங்கத்திற்கு சிபார்சுசெய்திருந்தார். ஆயினும் இதற்கான ஆரம்ப வேலைகள் எதுவும் நடக்கவில்லை. காணிகள் மாத்திரமே நிலஅளவைப் பகுதியினுல் அளக்கப்பட்டன. மாதிரிக் கிராமத்தை சிறந்தமுறையில் அமைப்பதற்கு சிலதனியாரின் காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டியிருந்ததால் அதில் தாதம் ஏற்பட்டது

சண்டிலிப்பாய் உதவிஅரசாங்க அதிபர் திரு ஏ. மகாதேவா இதுபற்றி துரித நடவடிக்கை மேற்கொண்டு இக்காணிகளை விரைவில் சுவீகரிப்பதற்கான ஒழுங்குகளை செய்துள்ளார்.

அடுத்தவாரம் இக்காணிகள் உத்தியோகபூர்வமாக சுவீகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து அங்கு யாழ் வீடமைப்பு அதிகாரசபையினர் வீடுகளை அமைக்கும்பணியில் ஈடுபடுவார்கள். சனசமூகநிலையம, உபதபால்நிலையம், அரசினர் மருந்தகம் ஆகியனவும் இங்கு அமைக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடம்

# பாடசாலைகள்உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும்

(அரியாலை)

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. எஸ். ரி. சாஹி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த உதைபந்தாட்டப் போட்டியை இவ்வருடம் சிறப்பாக நடாத்துவதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

மேற்படி போட்டிகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள உதைபந்தாட்டச் செயலாளர் ஜனுப் எஸ். எம் ஹமீட்டும், பொதுச்செயலாளர் காப்டன் என். சோமசுந்தரமும், நியமிக்கப்பட்டனர். இப்போட்டிகளுக்கான மத்தியஸ்தர்களை யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் வழங்குமென மத்தியஸ்தர் சங்கத்துணைச் செயலாளர் திரு. எஸ். ஜெயரத்தினம் கூட்டத்தில் தெரிவித்தார். (அ)

# அடுத்தமாதம் 10-ம் திகதி போட்டிகள் ஆரம்பம்

(அரியாலை)

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் வருடாந்த உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றவிருக்கும் பாடசாலைகளுக்கிடையில் 1ம். 2ம், 3ம் குழுக்களுக்கான நிகழ்ச்சி நிரலில் 1ம் குழுவில் 14 பாடசாலைகளும், 'ஏ'பிரிவிலுள்ள 2ம், 3ம் குழுக்களில் 15 பாடசாலைகளும், 'பி' பிரிவுக்கான 2ம் குழுவில் 6 பாடசாலைகளும் 3ம் குழுவில் 5 பாடசாலைகளும் பங்குபற்றவிருக்கின்றன.

அடுத்த மாதம் 1ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாம் குழுவினருக்கான போட்டிகள் யாழ்ப்பாண விளையாட்டரங்கிலும், 2ம், ம் பிரிவினருக்கான போட்டிகள் பாடசாலைமைதானங்களிலும் நடைபெறும் என்று உதைபந்தாட்டச்செயலாளர் ஜனுப் எஸ். எம். ஹமீட் தெரிவித்தார். சங்கப் பொதுச்செயலாளர் கப்டன் என். சோமசுந்தரம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (அ)

# "பொதுமக்களின் இரகசிய தகவலினால் 14 கொள்ளையர்கள் கைதாகினர்!'

## சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தகவல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் கடந்தமாதம் நிகழ்ந்த கொள்ளைச் சம்பவங்கள்போல் மேலும் தொடர்ந்தும் நடைபெறுதளவுக்கு, பொது மக்களின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் பொதுமக்கள் கொடுத்த ரகசியத் தகவலின் பேரில் பிரபல கொள்ளையர்கள் பிடிபட்டதுடன் கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.''

சுன்னாகம், கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரி திரு. பொன் சுகுணேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுன்னாகம்' கோப்பாய் பொலிஸ் பகுதிகளில் அமைக்கப்பட்ட பொலிஸ் — பொதுசன தொடர்பு கண்காணிப்புச் சபைகள், விழிப்பு குழுக்கள் ஆகியவற்றின் நிர்வாகிகள் பொதுக் கூட்டம் சுன்னாகத்தில் நடைபெற்ற போதே திரு பொன். சுகுணேந்திரன் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

திரு. சுகுணேந்திரன்மேலும் பேசுகையில், ''இணுவில், கோண்டாவில் போன்ற இடங்களில் நான்கு பெரிய கொள்ளைகள் நடந்திருக்கின்றன. இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் பீதியுடன் வாழ்வதாக எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது இக்கொள்ளைகள் நடைபெற்ற காலத்தில் நான் கடமையில் இருக்கவில்லை. இருந்தும் பொதுமக்கள் கொடுத்த ரகசியத்தகவலின்பேரில் 14 கொள்ளையர்கள் பிடிபட்டுள்ளனர். பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.''

பொலிசார்தான் எதனையும் செய்யவேண்டுமென பொது மக்கள் நினைக்கக்கூடாது. கொள்ளை, கொலை, களவு போன்ற பெரிய குற்றச்சம்பவங்கள் தொடக்கம் சிறு குற்றச் சம்பவங்கள்வரை ஈடுபடுவர்களை பொதுமக்களும் எதிர்த்துப் போராடவேண்டும்.

கீழ்த்தரமான இழிசெயல்களைச் செய்பவர்களை சமூகத்தில் நடமாடவிடக்கூடாது என்றி குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி, மதங்கொண்ட யானைகூட ஒருவரைத்தாக்க வந்தால் அதனை ஒழித்துக் கட்ட சட்டத்தில் இடமுண்டு என்று சொன்னார்.

',சுன்னாகம்— கோப்பாய் பொலிஸ் பகுதியில் வாழும் சுமார் இரண்டரை லட்சம் மக்களின் அன்றுட பிரச்னைகளைக் கவனிக்க வேண்டிய நிலையில் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியாகிய எனக்குண்டு. என்னுடன் 52 பொலிஸ் ஊழியர்கள் கடமையாற்ற வேண்டி இருக்கும் நிலையில் 29 பொலிசார் மாத்திரம் கடமையற்றுகிறுர்கள். குறிப்பிட்ட பொதுமக்களின் உயிர், உடைமைகளை இத்தனை பொலிசாரால் காப்பாற்ற முடியுமா? இப்படியான சூழ்நிலையில் நீங்கள்தான் விழிப்புடன் இருந்து செயலாற்ற வேண்டும்.

இரவு பகல் என்றுபாராது, நீதிமன்றக்கடமைகளுடன், அன்றுட விசாரணைகள், பாரியகுற்ற வாளிகளைக் கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளில் பொலிசார் ஈடுபட வேண்டி இருக்கின்றனர்.

மல்லாகம். இணுவில், கட்டுவன், அச்சுவேலி போன்ற இடங்களிலுள்ள சமாதான சபைகளின் சேவைகள் குறித்தும் அவர் பாராட்டினுர்.

இச்சபைகள் இன்றில்லாவிடில் இன்றைய சூழ்நிலையில் பொலிசார் பல பிரச்னைகளை தீர்த்திருக்க முடியாது என்றும் திரு. சுகுணேந்திரன் குறிப்பிட்டார்

திரு. சுகுணேந்திரனின் சேவையைப் பாராட்டி இணுவில் சமாதானசபைத் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து பேசுகையில், 800க்கு மேற்பட்ட வழக்குகளை இணுவில் சமாதான சபை தீர்மானித்துள்ளது என்றுர்.

மல்லாகம் பொலிஸ்பொதுசன தொடர்பு கண்காணிப்புச்சபைத் தலைவர் திரு. சு. மு சுப்பிரமணியம் பேசுகையில், ''எமது சபை 669 வழக்குளை சமாதான முறையில் முற்றுகத் தீர்த்துவைத்துள்ளதாகவும், 200 வழக்குப் பிரச்னைகள் விசாரணையில் இருந்து வருவதாகவும், நீதிமன்றத்தில்கூடப் பாராட்டுப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் திரு. செ. இலகுநாதன், மற்றும் கிராமோதய சபைத்தலைவர்கள், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (மா)

## கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நயினுதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் திருப்பணி வேலைகளை மீண்டும்ஆரம்பித்து விரைவில் முடித்து கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்ற தீர்மானம் கோவில் அறங்காவலர் சபைக் கூட்டத்தில் நிறைவேறியது

க்கூட்டம் சபைத் தலைவர் சட்டத்தரணி திரு. நா. க. கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது யாழ் மாவட்ட நீதிமன்ற உத்தரவின்படி வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. இ நாகராசா நடத்துனராகபணியாற்றினர்.

கோயிலின் நிலையான வைப்புக்கணக்கிலிருந்து மூன்றரை லட்ச ரூபாவை மீளப்பெற சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் திரு. நாகராசாவின் முயற்சியால் இருபிரிவாக பிளவுபட்டு நின்ற அறங்காவலர்களைஒன்று சேர்த்து செயல்படுவதாகவும், தெரிவிக்கப்பட்டது. பதவிக்காலம் முடிந்துள்ள திரு. க. கதிரேசுவின இடத்திற்கு புதியவரை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. க

## 'கலாசூரி' பத்மநாதனுக்கு இன்று பாராட்டுவிழா



(கோண்டாவில்)

'கலாசூரி' விருதுபெற்ற நாதஸ்வர கலாநிதி திரு, என். கே. பத்மநாதன் இன்று கௌரவிக்கப்படுகின்றுர்.

கோண்டாவில் தாவடி இசைக் கலைஞர்களும் ரசிகப் பெருமக்களும் இணைந்தளிக்கும்இப்பாராட்டுவிழா இன்று மாலை கோண்டாவில் மேற்கு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய முன்றலில் யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கா, கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இப்பாராட்டு விழாவில் திரு. பத்மநாதனுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

இப்பாராட்டு விழாவில், பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் தங்கப்பதக்கம் வழங்க, மிருதங்கவித்துவான் ஏ. சந்தானகிருஷ்ணன் பொன்னுடை போர்த்திக்கௌரவிப்பார். 'இயலிசை வாரிதி' என் வீரமணிஐயர் பாராட்டுப் பத்திரம் வழங்குவார்.

ஓய்வுபெற்ற நீதிபதி கே. வி. நவரத்தினம், வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், பொலிஸ் பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரன் உட்பட பலர் ஆசியுரை வழங்குவார்கள்.

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் மாத ந்தப் பொதுக் கூட்டம் இன்றுகாலை யாழ். செயலகத்திலுள்ள சபாமண்டபத்தில் மாவட்டசபைத்தலைவர் திரு. சு. நடராசாதலைமையில் நடைபெறவுள்ளது.

0 0

இன்று பிற்பகல் யாழ்மாநகராட்சிமன்ற பொதுக்கூட்டம் யாழ் மாநகராட்சிமன்ற முதல்வர் திரு. இராஜாவிசுவநாதன் தலைமையிம் நடைபெறவுள்ளது.

0 0

மக்கள் விடுதலை முன்னணியின், ஜனாதிபதி தேர்தல் பிரசாரக்கூட்டம் இன்று மாலை யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெறவுள்ளது மக்கள்விடுதலைமுன்னணித்தலைவர் திரு ரோஹணவிஜேவீர உரைநிகழ்த்துவார். (மா)

0 0

கலைநிகழ்ச்சி

கொக்குவில் கலைக்கோவில் அமரகலாநாட்டியாலய ஏழாவது ஆண்டுவிழா கலைநிகழ்ச்சி இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது

## வட்டு எம்.பி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவரத்தினம் தெரிவித்தார்

### இன்றுகூடுகிறது

நிலைமை இவ்வாறிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் நியமனக்குழு இன்று மாலை கொழும்பிலுள்ள கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் இல்லத்தில் கூடி, வட்டுக்கோட்டைத் தொகுதியின் புதிய எம். பி. பற்றி இறுதிமுடிவுசெய்யும்.

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாண பிரபல எழுத்தாளர் ஒருவரின் புதிய பாணியில் அமைந்த சிந்தனை வெளியீட்டுவிழா, இவ்வாரம் யாழ். நகரில் நடைபெறுகிறது.

நூல்வெளியீட்டு விழா அழைப்பிதழில் —

"...ஆக்கத்திறமைகளை அரவணைத்து; போலிகளின் போக்கைப் புறம்தள்ளும் புது அமைப்பு...'' என்று அச்சிடப்பட்டுள்ளது!

'ஊர்குருவி

## ரூபவாஹினி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அக். சனி: இரவு 8-00—8-15 திரு. ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க,).

## வானொலி உரைகள்

செப். 30 வியாழன் இரவு 7-00 — 7-15 திரு. ரோஹண விஜேவீர. (ம. வி. மு.)

அக். 3 ஞாயிறு: காலை 7.45 —8-00 திரு. ஹெக்டர் கொப்பேகடுவ (சு க.)

அக். 3 ஞாயிறு இரவு 7-45 — 8-00 டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா (ச. ச. கட்சி]

அக். 3 ஞாயிறு இரவு 9-30 —9-45 திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (அ. இ. த. கா.)

அக். 5 செவ்வாய் இரவு 7-45—8-00 திரு. வாசுதேவ நாணயக்கார [ந. ச. ச. க.]

அக். 7 வியாழன் இரவு 7-00—7-15 திரு. ரோஹண விஜேவீர [ம. வி. மு ]

அக். 9 சனி இரவு 7-30 — 7-45 டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா [ச. ச. க]

அக் 9 சனி இரவு 7-45 — 8-00 திரு. வாசுதேவ நாணயக்காரா [ந. ச. ச. க.]

அக். 10 ஞாயிறு காலை 7- — 8-00 திரு ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க.]

அக். 10 ஞாயிறு இரவு 7-45 —8-00 திரு. ஜி.ஜி, பொன்னம்பலம் [அ. இ. த. கா.]

அக். 10 ஞாயிறு இரவு 8-45 —9-00 திரு. வாசுதேவநாணயக்கார [ந ச. ச க]

அக். 14 வியாழன் காலை 7-00 — 7-15 திரு ரோஹண விஜேவீர [ம. வி மு.]

அக். 16 சனி இரவு 7.00- 7.15 திரு. ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.)

அக். 16 சனி இரவு 7.45- 8 00 டாக்டர் கொல்வின ஆர். டி. சில்வா (ச. ச. க.)

அக். 16 சனி இரவு 8.15- 9.00 திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன [ஐ தே. க.]

அக். 16 சனி இரவு 9-30 — 9-45 திரு ஜி ஜி.பொன்னம்பலம் [அ இ த கா]

## ஆரோக்கியமாதா திருவிழா இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். கஸ்தூரியார் வீதி புனித ஆரோக்கியமாதா ஆலயத் திருவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

அடுத்த மாதம் 2 ம் திகதி சனிக்கிழமை திவ்விய நற்கருணை பவனியும், 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலைபாடல் பூசையுடனும் திருச்சொரூப பவனியுடனும் திருவிழா நிறைவுபெறும்.

இறுதிநாள் இரவு நாடகம் முதலான கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். [அ]

பெய்ரூட் படுகொலை

## நீதிவிசாரணை நடைபெறும்

டெல்அவில், செப் 28

மேற்கு பெய்ரூட்டிலுள்ள இரு அகதிகள் முகாமகளில் வைத்து சுமார் 1400 பாலஸ்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்த சட்டபூர்வமான நீதித்துறை கமிஷனை நியமிப்பதென்று இஸ்ரேலிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச நாடுகள் தெரிவித்த கண்டனங்களையடுத்தே இஸ்ரேல் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [வெ]

## இயக்குநர் சபை மீது நம்பிக்கை இல்லையாம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்காக சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தை விரைவில் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு 32 சங்கப் பொதுச்சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு விண்ணப்பம் ஒன்றை யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர். [அ]

## 1,000 பஸ்கள் சேவையிலீடுபடும்

(கொழும்பு)

உலகவங்கியின உதவியுடன் அடுத்த ஆண்டில் 22 புதிய பஸ் டிப்போக்கள் அமைக்கப் படவுள்ளன. 33 பிரதான பஸ்நிலையங்களும் நிறுவப்படவுள்ளன.

நாடு முழுவதும் 1,000 பஸ்களை சேவையிலீடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவு மத்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் கலாநிதி காமினி விஜயசேகரா தெரிவித்தார். (வெ)

## யாருடையது?

மோட்டார் காரின் இன்சூரன்ஸ் பத்திரமும், பதிவுப் பத்திரமும் அரியாலை கிழக்கைச் சேர்ந்த குமாரசாமி விஜயகுமார் என்பவர் யாழ். அன்னை வேளாங்கண்ணிமாதா கோவிலடியில் கண்டெடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அத்தாட்சிப்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

★

சாரதி லைசென்ஸ் புத்தகம் ஒன்றை மல்லாகம் பொலிஸ்—பொதுசனத் தொடர்பு சங்கத் தலைவர் திரு. எஸ். எம்.சுப்பிரமணியம் மல்லாகத்தில் கண்டெடுத்து 'ஈழநாடு, காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும். [மா]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.